உ
சிவமயம்



யாழ்ப்பாணம், நெடுந்தீவில்
புகழ்பூத்த குடும்பங்களில் பிறந்து,
சீரும் சிறப்புமாக வாழ்ந்து
இறைபதம் அடைந்த

**குமாரசாமி - பொன்னம்மா**

**தம்பதியின்**
சிவபதப்பேறுகுறித்த

# ஞாபகார்த்த பொன்மலர்

22.11.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சமர்ப்பணம்

*எம்மைப் பெற்று வளர்த்து*
*பெயரிட்டு பெருமைகொள்ளவைத்த*
*எமது ஐயாவுக்கும் அம்மாவுக்கும்*
*எமது சிரம் தாழ்த்தி வணங்குவதுடன்,*
*அவர்களது பாதாரவிந்தங்களில்*
*இந்த பொன்மலரை*
*சமர்ப்பிக்கின்றோம்*

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# சுப்பிரமணியம் குமாரசாமி

தோற்றம்: 06.04.1926 மறைவு: 19.07.2010

திதி வெண்பா

ஆடிநற் றிங்கள் அணிவிகிர்தி வளர்நவமி
தேடிநற் றாளிணைகள் சேர்ந்தனன் - தேடரும்
பேராளன் செய்ய பெருங்குணக்கு **மாரசாமி**
ஊர்சாற்றி சீருயர்ந்தான் காண்.

அமரர்

# குமாரசாமி பொன்னம்மா

தோற்றம்; 05.09.1926 மறைவு: 02.12.2010

திதி வெண்பா

ஆண்டு விகிர்தி அபரபட்ச துவாதசிநாள்
பூண்டகார்த் திகைத்திங்கள் **பொன்னம்மா** - காண்டரிய
நீடுகழல் கண்டார் நிறைகுணத்துக் குலவிளக்கு
தேடிவளர் அயல்சுற்றம் சீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## திருவாசகம்

பானினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
யுலப்பிலா வானந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துட் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காகத்
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா – விளம்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற வுழறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பு மறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குல தெய்வம்
# பெருக்கடி விநாயகர் திருவூஞ்சல்

நெடுந்தீவு மத்தி பெருக்கடி
ஸ்ரீ சித்தி புத்தி விநாயகர் பேரில்

**நவாலியூர் க.சோமசுந்தரப்புலவர் அவர்கள் பாடிய**

## ஊஞ்சல் பதிகம்

### காப்பு

நீர்பூத்த கடல் புடைசூழ் நெடுந்தீவிற் சீர்
நிறைபூத்த பெருக்கடியில் நிறைந்து வாழும்
ஏர் பூத்த மறைநான்கின் முதலு மாகி
எழில்பூத்த இறுதியுமா யெல்லாமான
கார்பூத்த கரடதட விசுடகும்பத்
கணபதியே உனது பெருங் கருணைபோற்றி
சீர் பூத்த செந்தமிழால் ஊஞ்சல் பாடச்
சிவம் பூத்த சேவடிகள் சிந்திப்போமோ.

### நூல்

உருமலிந்த மறைநான்குந்த தூணாநாட்டி
ஒளிமலிந்த சிவகாம நூல் விட்டம் பூட்டி
கருமலிந்த கலைஞான விடயங்கள் மாட்டி
கவிமலிந்த தமிழ்மறைபொற் பீடங்கூட்டி
மருமலிந்த சோதிமணி மாலை நீட்டி
மனமலிந்த பெருக்கடியிற் சிறந்து வாழும்
திருமலிந்த பெருக்கடியிற் சிறந்து வாழும்
சித்தி புத்தி விநாயரே ஆடீரூஞ்சல்

தூவமர் குண்டோதரனார் கவிதை தாங்க
துதியமரும் பூதகணம் கவரி வாங்கச்
சேவமரும் வருணனுயர் பனிநீர்தூவ
திறலமரும் நமனொளி கொளுடைவாள் காவப்
பூமலரும் நான்முகனார் ஆசி கூற
புகழமருமமரர் குழாம் மலர்கள் வீசத்
தேவமரும் பெருக்கடியிற் சிறந்து வாழும்
சித்தி புத்தி விநாயகரே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை மருவுமாடாக யாழ் முனிவன்மீட்ட
இனமருவு கரவாணன் தங்கங்கூட்ட
நசைமருவு நந்திபிரான் பிரம்பு நீட்ட
நலமருவு கணநாதர் கடனங் காட்டக்
குசை மருவுமந்தணர் நடனங் காட்டக்
குலமருவு பல்லியங்கள் குழுமி ஓங்கத்
திசைமருவு பெருக்கடியிற் சிறந்து வாழும்
சித்தி புத்தி விநாயகரே ஆடீரூஞ்சல்

அப்பமவல் முக்கனி சர்க்கரையும் பாகும்
ஆவினறும் பாலிளநீர்கரும்புந் தேனும்
ஒப்பில் சுவைப், புத்துமுது முதவி அன்பாய்
ஓங்கார முழுமுதலே உண்பாய் என்று
மெய்ப்புகழ் சேர் மந்திரங்கள் விரும்பியோதி
மெய்யடியார் வழிபடி நல்வரங்கள் ஈந்தே
செப்பு புகழ் பெருக்கடியிற் சிறந்து வாழும்
சித்தி புத்தி விநாயகரே ஆடீரூஞ்சல்

அம்புலிச் செஞ் சடையானு மிடப்பால் மேவ
அம்மையுமையவளு மருளரசே யென்றும்
வெம்பு கய முகனைவென்ற விமலாவென்றும்
விக்கினங்கள் தீர்த்தருளும் மேலோய் என்றும்
நம்பு சுடர் வேற்பெருமான் துணைவாவென்றும்
நாதாந்தத் தனிவெளியில் நாதாவென்றும்
செம்புகழ் சேர் பெருக்கடியிற் சிறந்து வாழும்
சித்தி புத்தி விநாயகரே ஆடீரூஞ்சல்

ஒருகொம்பு மிருசெவியு மூன்று கண்ணும்
ஓதுமொரு நால்வாயுங கரங்கள் ஐந்தும்
வருமெங்கள் பிறப்பறுத்து வீடு நல்கும்
மணச்சிலம்பு புலம்பு மிருகழுலுமான
உருவெங்கும் காட்டியுயிர்க் கருணை நல்கும்
ஓங்கார மறைமுதலே உலகம் போற்றத்
திருவெங்குமலிந்த பெருக்கடியில்வாழும்
சித்தி புத்தி விநாயகரே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கர சங்கர குமராவாடீருஞ்சல்
அம்பிகை சங்கரி மதலாயாடீருஞ்சல்
பொங்கரவ கங்கணேயாடீருஞ்சல்
பூதகண வரநாத வாடீரூஞ்சல்
வெங்கரி சங்கதி விலாவாடீரூஞ்சல்
விக்கினந் தீர் விநாயகரே யாடீரூஞ்சல்
செங்கமலை சேர்ந்த பெருக்கடியில்வ ாழும்
சித்தி புத்தி விநாயகரே ஆடிரூஞ்சல்

ஆதிமறையுருவாகி யுதித்தல் பாடி
அமரருக்காய் கயமுகனையடுதல் பாடிப்
பூதலகத்தில் காவிரியை விடுத்தல் பாடிப்
பொற்கிரியில் பாரதத்தைப் பொறித்தல் பாடி
மாதவனைப் பாம்புருவம் மாற்றல் பாடி
வன்னியுடன் மாந்தாரை மகிழ்தல் பாடித்
தீதகலப் பெருக்கடியிற றொண்டர் போற்றும்
சித்தி புத்தி விநாயகரே ஆடீரூஞ்சல்

ஆவாழி மழைவாழி அறங்கள் வாழி
அருமறையந் தணவர்வாழி அரசர் வாழி
பூவாழி மன்னுயிர்கள் பொலிந்து வாழி
பூதிகண்டியைந் தெழுத்தும் பொலிந்து வாழி
பாவாழி பரவுசிவ னடியார் வாழி
பர சிவனம்பிகை குமரன் பதங்கள் வாழி
தோவாழும் பெருக்கடியும் சிறந்து வாழி
சித்தி புத்தி விநாயகரும் வாழி வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு மேற்கு நெழுவினி சித்திவிநாயகர் திருவூஞ்சல்

## காப்பு

சீர்பூத்த வேதசிலாகமங்கள் ஓங்க
திகழுமி யாழ்ப்பாணநகர்க் கொருசார்பாகி
நீர்பூத்த நெடுந்தீவிற் குடபா லோங்கு
நெழுவினியிற் சித்திவிநா யகர்தம் மீதிற்
பேர்பூத்த ஊஞ்சலிசை யினிது பாடப்
பிறை பூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
கார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோதுங்
கடம்பூத்த கணபதிகாள் காப்பதாமே.

பூமேவு நான்மறையுங் கால்க ளாகப்
புரையிலும வேதமெழிற் சட்ட மாக
பாமேவு முபநிடதம் பலகையாகப்
பரவுமெண்கலைகளுயர் கயிறதாக
மாமேவு சிவாகமமே விட்டமாக
மருவு பிரணவமாகும் மஞ்சமீது
தேமேவு சோலைநெழு வினியில்வாழுஞ்
சித்திவிநா யகமுதலே யாடீ ருஞ்சல்

ஆதார சத்தியொடு மனந்த னேந்து
மதன்தன்மை பீடமுறு பதுமமீதில்
தாதாரும் வாமாதி சத்தி போற்றத்
தயங்கிரவி மதியன்நல் சத்தி யாகும்
மீதான மண்டலத்தின் மேலே தங்கி
மெய்யடியார்க் கடியர்பல வினைகளான
தீதான திரியநெழு வினியில் வாழுஞ்
சித்திவிநா யகமுதலே யாடீ ரூஞ்சல்

அரிபிரமர் மலர்சிதற வமரர் கோனு
மழலவனு மடப்பையொடு தீபந் தாங்க
வருநிருதி யமனுடைவாள் பிரம்பொ டோங்க
வருணனொடு வளிசிவறி வட்ட மேந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவிசசி கவிதையோ டங்கிருபால் மேவ
இயக்கர்பதி யீசான னமரர் போற்றத்
திருமறைமா முனிவரர் கரவென் றேத்தச்
சித்திவிநா யகமுதுலே ஆடீருஞ்சல்

அந்ததுந் துபி முளங்க வியங்க ளார்ப்ப
அமரர்மறை முனிவர்தரு மலர்கள் தூற்ற
பந்தமறு தும்புருநா ரதர்கள் பாடப்
பரிவினொடு மரமகளிர் நடன மாட
வந்தரம்மை ஊர்வசிவெண் கவரி நீட்ட
மகிழ்ந்து திலோத் தமையருகே வந்தொட்டாட்ட
சிந்தையருள் பொழிந்துநெழு வினியில் வாழுஞ்
சித்திவிநாயகமுதலே யாடீ ரூஞ்சல்

ஐங்கரனெ யுமைமகனே யாடீ ரூஞ்சல்
அருளொளுகு கயமுகனே யாடீ ரூஞ்சல்
சங்கரனார் திருமகனே யாடீ ரூஞ்சல்
தங்குபுவி நீரனல்கால் விசும்பொ டான்மாச்
சசியிரவி யென்னுமட்ட மூர்த்தி யாகுந்
திங்களணி திருமுடியா யாடீ ரூஞ்சல்
சித்திவிநா யகமுதலே யாடீ ரூஞ்சல்

அந்தணரா வினமரசர் வணிகர் வாழி
அவனிமழை பொழிந்து வேளாளர் வாழி
புந்திமகிழ் சிவனடியா ரெவரும் வாழி
பொருவில்சைவ சித்தாந்த நெறியும் வாழி
செந்திருநா மகளருளிங் கெங்கும் வாழி
திருநீறும் மஞ்செழுத்துஞ் சிறந்த வாழி
சிந்துவளர் நெடுந்தீவி லடியார் வாழி
சித்திவிநா யகரடிகள் வாழி வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சரவண பவ

# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும்கைகூடும் நிமலர்அருள் கந்தர்
சஷ்டிகவசந்தனை

குறள் வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

## நூல்

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மையல் நடஞ் செய்யும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்க வென்று வந்து
வர வர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிற நிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியுங்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற்றேன் முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலியாஞ் சிவ குகன் தினம் வருக
ஆறுமுகமும் அணி முடியாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்நெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடையழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்(து) உதவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா விநோதன் என்(று)
உன்திருவடியை உறுதியென்றெண்ணும்
என் தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதி செவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில் வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணை வேல் காக்க
முன்கை இரண்டும் முரண் வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனைய வேல் காக்க
ஏமத்தில் ஜாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கி சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்ம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இததுன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங்காரமும் மிகு பல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பல கலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதர்கள் எனைக் கண்டால் கலங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சி நடுங்கிட அகன்று புரண்டிட
வாய்விட் டலற மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கள்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைதாள் சிலந்தி
பற்குத்து அரணை பரு அரையாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திருநாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுரபவனே திக ழொளி பவனே
பரிபுர பவனே பவம் ஒழிபவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துக் தேவர்கள் கடுஞ் சிறைவிடுத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த, இனிய வேல்முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமரா
ஆவின் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வராயா
சமராபுரி வாழ் சண்முகத்தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவிநன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறு உருக்கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அட்டதிக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலான் கவசத்தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற்காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகையதனால்
இருபத்தேழ்வர்க் குவந்த முதளித்த
குபேரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக்குழந்தை சேவடி போற்றி
என்னைத் தடுத்தாட் கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோரரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பல்லிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூசிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளத்தினில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயு தத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தல மொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதும் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக்கு அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியட்டு நிலையும் தெரிசனப் படுத்தி
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தனை தெளிவித்து
இருள் வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள் தரும் ஆனந்தத்து அழுத்தியென் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தில் உள்ளே சிவலிங்கம் காட்டிச்
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி,
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயக கவசம்

காசிப முனிவர் அருளியது

வளர்சிகைப் பாரபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்த்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக
மதோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபஷாகாக்க புரவந் தம்மைத்
தளர்வின்மகே தரர்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க.

கவின் வளரு மதரங்கச முகர் காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகங் கிரிசைகதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாங் காக்க
வவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்
செஞ்செவி பாசபாணி காக்கா
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க.
காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்ககளங் கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தா மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவினா
சன் காக்க விதயந் தன்னைத்
தொமகலுங் கணநாதர் காக்கவகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க.

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்லல்
உக்ககண பன்காக்க வூருவைமங்
களமூர்த்தி யவந்து காக்க.

தாழ்முழந்தாண் மகாபுத்தி காக்கவிரு
பதமேக தந்தர் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் யாசாபூ ரகர்காக்க
விரல்பதும் வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர்காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க.

அக்கினியிற் சித்தீசர் காக்கவுமா
புத்திரர் தென்னாசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்கவா யவிற்கசகன்
னன்காக்க திகழு தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கி
லீசந்ந தனரே காக்க
ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி பிரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கவிராக்
கதர்பூத முருவே தாள
மோகினிபே யிவையாதி யுயிர்த் திறத்தால்
வருந்துயரு முடிவி லாத
வேகமுறு பிணிபலவம் விலக்குபபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க
மதிஞானந் தவந்தான மானமொளி
புகழ்குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிரக
மனைவிமைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க
வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
எற்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடினும்பா லிடையூ றொன்றும்
ஒன்றுரு முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதி னாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்க அஷ்டகம்

நான்முகன் திருமால் பூஜை செய் லிங்கம்
தூயசொல் புகழ் பெறும் பேரெழில் லிங்கம்
பிறவிப் பெருந்துயர் போக்கிடும் லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவ லிங்கம்.

காமனை எரித்த பேரருள் லிங்கம்
ராவணன் கர்வம் அடக்கிய லிங்கம்
வழிவழி முனிவர்கள் வழிபடும் லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவ லிங்கம்

திவ்ய மணம் பல கமழ்கின்ற லிங்கம்
சித்தம் தெளிவிக்கும் சித்தர்கள் லிங்கம்
தேவரும் அசுரரும் வணங்கிடும் லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவ லிங்கம்

படமெடுத்தாடிடும் பாம்பினை லிங்கம்
கனகன்நின் நவமணி ஒளித்திடும் லிங்கம்
தக்ஷனின் யாகத்தை அழித்திட்ட லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவ லிங்கம்

குங்குமச் சந்தனம் பொலிந்திடும் லிங்கம்
பங்கய மலர்களை சூடிடும் லிங்கம்
வந்திடும் பாவத்தைப் போக்கிடும் லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கணங்கள் போற்றிடும் லிங்கம்
அன்பர்கள் பக்தியை ஏற்றிடும் லிங்கம்
கதிரவன் கோடி சுடர்மிகு லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவ லிங்கம்

எட்டிதழ் மலர்களைச் சூட்டிடும் லிங்கம்
எல்லாப் பிறப்புக்கும் காரண லிங்கம்
அஷ்டதரித்திரம் அகற்றிடும் லிங்கம்
வணக்கம் ஏற்ப சதாசிவ லிங்கம்

கரவரை குருவுடன் தொழுதிடும் லிங்கம்
நிரந்தரமானத்து மலர்நிறை லிங்கம்
அனைத்துக்கும் மேம்படு பரம்பொருள் லிங்கம்
வணக்கம் ஏற்க சதாசிவ லிங்கம்

சிவ சன்னிதானத்தில் இதனை உரைப்பார்
சிவபதமெய்தியே சிவனோடு இருப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு பதிகங்கள்



வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

என்பொடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை உடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றொ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி வெயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல
அடியாரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கை யோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு கால னங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுண நல்ல நல்ல அவை நல்ல
அடியாரவர்க்கு மிகவே

நஞ்சணி கண்ட னெந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

வாள்வரி அதள தாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

செப்பிள முலைநன்மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வன் அடைவர்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்தவதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்பட விழிசெய் தன்று விடைமேல் இருந்து
மடவாள்த னோடும் உடனாய்
வான்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழி லங்கை அரையன்றனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

பலபல வேட மாகும் பரன்நரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடெ ருக்கு முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடும் தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

கொத்தவர் சூழலி யோடு விரயற்கு நல்கு
குணமாய் வேட விகிர்தன்
மத்தமு மதியும்நாக முடிமேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
புத்தரொ டமனை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை இடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

தேனமர் பொழில்கொ ளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வார் ஆணை நமதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி துணை

ஓம் சக்தி

# கௌரிக் காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின்றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்ற மொரு பொருட் குற்றம் சோர்வு தரும்
எக் குற்றமும் வராமற்கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியாரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்னுள் இருந்தே என்னைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகாதேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க் கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனே எண்ணியல்லோ சங்கரி நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி யொழிந்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகையாற்றும் படலமிதை வழி வழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுக
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமாரியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசத்தி தாயவளே
எட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே வாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாரேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைநீக்கிக் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றி விட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகி வரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமம் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலையாய் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண் திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவியளரி வோர்க்கு
சிந்தி யெல்லாந்தருவாள் பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சக்தி லோர்களெல்லாம் ஏற்றியும்மைப் போற்றுவோர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறை அணிந்துவர முன் வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லலிதா நவரத்தின மாலை

## காப்பு

ஆக்கும் தொழில் ஐந்தரனாற்ற நலம்
பூக்கும் நகையாள் புவனேஸ் வரிபால்
சேர்க்கும் நவரத்தின மாலையி னைக்
காக்கும் கனநாயக வாரணமே

## வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்
கண்மூடி நெடுங்கன வானதவம்
பெற்றும் தெரியார் நிலையென்னில் அவம்
பெருகும்பிழையேன் பேசத்தகுமோ
பற்றும் வயிரப்படைவாள் வயிரப்
பகைவர்க்கெமனா கஎடுத்தவளே
வற்றாத அருட்சுனையே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

## நீலம

மூலக்கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக்கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக்குவையே சரணம்
நீலத் திருமேனியிலே நினைவாய்
நினைவற் றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக்குமரி வருவாய் வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்ிகையே.

## முத்து

முத்தேவரும் முத்தொழிலாற்றிடவே
முன்நின்றருளும் முதல்வே சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவாசினியே சரணம்
தத்தேறிய நான் தனயன் தாய் நீ
சாகாத வரம் தரவே வருவாய்
மத்தேறு ததித்தினை வாழ்வடையேன்
மாதா ஜெய ஓம் லலிதாமபிகையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவளம்

அந்தி மயங்கிய வானவிதானம்
அன்னை நடம்செய்யும் ஆனந்தமேடை
சிந்தை நிறம் பவளம் பொழிபாரோ
தேம் பொழிலாமிகு செய்தவளாரோ
எந்தையிடத்தும் மனத்தும் இருப்பாள்
எண்ணுபவர்க்கருள் எண்ணமிகுந்தாள்
மந்திர வேத மயப்பொருளானாள்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

## மாணிக்கம்

காணக்கிடையாக் கதியானவளே
கருதக்கிடையாக் கலையானவளே
பூணக்கிடையாப் பொழிவானவளே
புனையக்கிடையாப் புதுமைத்தவளே
நாணித்திரு நாமமும் நின் துதியும்
நவிலாதவரை நாடாதவளே
மாணிக்க ஒளிக்கதிரே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

## மரகதம்

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
சுதிஜதிலயமே இசையே சரணம்
அரகர சிவ என்றடியவர் குழும
அவரருள்பெற அருளமுதே சரணம்
வர நவ நிதியே சரணம் சரணம்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## கோமேதகம்

பூமேவிய நான் புரியும் செயல்கள்
பொன்றாது பயன் குன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெய சக்தி எனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமேதகமே குளிர்வான் நிலவே
குழல்வாய் மொழியே தருவாய் அருள்வாய்
மாமேருவிலே வளர்கோகிலமே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதுமராகம்

ரஞ்சனி நந்தினி அங்கணி பதும
ராகவிகாஸ வியாபினி அம்பா
சஞ்சலரோக நிவாரணி வாணி
சாம்பவி சந்தரகலாதரி ராணி
அஞ்சன மேனி அலங்க்ருத பூரணி
அம்ருத சொருபிணி நித்ய கல்யாணி
மஞ்சுள மேரு சிருங்க நிவாஸினி
மாதா ஜெய ஓம் லிதம்பிகையே

## வைடுரியம்

வலையொத்த வினை கலையொத்த மனம்
மருளப் பறையா றொலியொத் தவிதால்
நிலையற்றெளியேன் முடியத்தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலைவற் றசைவற் றநுபூதிபெறும்
அடியார் முடிவாழ் வைடுரியமே
மலையத்துவசன் மகளே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதம்பிகையே

## பயன்

எவர் எத்தினமும் இசைவாய் லலிதா
நவரத்தின மாலை நவின் றிடுவார்
அவர் அற்புத சக்தி எலாம் அடைவார்
சிவரத்தின மாய்த் திகழ்வா ரவரே

**(மாதா ஜெய)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவி தோத்திரம்

வாழ்வும் ஆனவள் துர்க்கா வாக்கும் ஆனவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயு மானவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

உலகை யீன்றவள் துர்க்கா உமையு மானவள்
உண்மை யானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

செம்மை யானவள் துர்க்கா ஜெபமு மானவள்
அம்மை யானவள் அன்புத் தந்தை யானவள்
இம்மை யானவள் துர்க்கா இன்ப மானவள்
மும்மை யானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

உயிரு மானவள் துர்க்கா உடலு மானவள்
உலகமானவள் எந்தன் உடமை யானவள்
பயிரு மானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

துன்ப மற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையு மானவள் இன்பத் தோணி யானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தாங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவு மானவள் துர்க்கா குழந்தை ஆனவள்
குலமு மானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவு மானவள் துர்க்கா திரிசூலி யானவள்
திரு நீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

கன்னி துர்க்கையே இதயக் கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீர ககன துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதிஅணி சூலினி
மன்மத பாணியளே
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியள் கனிமுகங் கண்டநல்
கற்பகக் காமினியே
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

கான்உறு மலர்எனக் கதிர்ஒளி காட்டிக்
காத்திட வந்திடுவாள்
தான்உறு தவஒளி தார்ஒளி மதிஒளி
தாங்கியே வீசிடுவாள்
மான்உறு விழியாள் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே
எங்குலந் தழைத்திட எழில்வடிவுடனே
எழுந்தநல் துர்க்கையளே
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

தணதண தந்தண தவில்ஒலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்
பணபண பம்பண பறைஒலி கூவிடப்
பண் பணி நீ வருவாய்
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணம்மிகு வேழனைக்
கொடுத்தநல் குமரியளே
சங்கடம் தீர்த்திடச் சமர்அது செய்தநல்
சக்திஎனும் மாயே
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

எண்ணியபடியே அருளிட வருவாய்
எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி அதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
என்றுநீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச்
சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய்
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

ஜெயஜெயபாலா சாமுண்டேஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய துர்க்கா ஸ்ரீபரமேஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெயஜெய ஸ்ரீதேவி
ஜெயஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பிரமணியக் கடவுள் நாமாவளி

வேல் முருகா மால்மருகா வா வா சண்முகா
கால்பிடித்தேன் காத்தருள வா வா சண்முகா (வேல்)

நால்வேதப் பொருளான நாதா சண்முகா
நல்லதெல்லாம் உன்பால்கொண்டாய் நாதா சண்முகா
செல்வமாகச் சிவை அணைக்கும் சேயே சண்முகா
செங்கதிர்வேல் தாங்கியஎன் தேவா சண்முகா (வேல்)

ஆறுபடை வீடுடைய ஆண்டவா சண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா சண்முகா
தேறுதலைத் தருபவனே தேவா சண்முகா
சிங்கார ஓங்கார சிவனே சண்முகா (வேல் )

நாறுமாலை யணிமார்பா நாயகா சண்முகா
நாதவிந்து கவாதீத நாயகா சண்முகா
ஏறுமயில் வாசனனே ஏந்தலே சண்முகா
நீறணிந்தார் வினைகோக்கும் நீதனே சண்முகா வேல்)

வீடும் நாடும் நின்றிருந்தாள் வேண்டினேன் சண்முகா
வீரன் சூரன் உடல்கிழித்த வேலனே சண்முகா
ஓடும் மனம் உன்னைநாட ஆடிவா சண்முகா
ஒருவனேயென் வினையழித்த உத்தமா சண்முகா (வேல்)

எல்லையில்லா ஆனந்தனே ஏகாந்தா சண்முகா
எங்கும் நிறைந்த அன்புருவே ஏமுருகா சண்முகா
தில்லையிலே ஆடுந்தேவி பாலகா சண்முகா
திரட்டுத்தனமாய்க் குறக்கொடியைக் கொண்டவா சண்முகா
(வேல்)

தொல்லையெல்லாம் கடந்த பாதம் தந்திடாய் சண்முகா
தோத்தரித்தோம் எங்கள் முன்னே வந்திடாய் சண்முகா
கல்லையொத்த மனமுருகக் கருணைசெய் சண்முகா
கல்லென்ச் சிலம்பொலிக்க ஓடிவா சண்முகா (வேல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரத்தி

ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி - ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா
- ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அடைய - அம்மம்மா தேவையெல்லாம் மறைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை
- ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரமருள்வாய் - அம்மம்மா ஈஸ்வரி வரமருள்வாய்
கரங்குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய்
- ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

காசினியெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் -அம்மம்மா கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலமே
- ஓம் ஸ்ரீஜெய ஜெய ஜெய சக்தி

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து ஞான நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா
- ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமாரசாமி - பொன்னம்மா தம்பதியர்
# வாழ்வியல் சுவடுகள்

இந்து சமுத்திரத்தின் நித்திலம் என போற்றப்படும் இலங்கைத் தீவின் சிரசாக விளங்குவது யாழ்ப்பாணப் பிரதேசம்.

யாழ் நகரில் இருந்து தென் மேற்குத் திசையாக உள்ள பண்ணைக் கடலை அடுத்து வருவது சப்த தீவுகள்.

சுமார் 15 மைல் தொலைவில் உள்ள குறிகட்டுவான் இறங்கு துறையில் இருந்து ஏழு கடல் மைல் தூரத்தில், ஆழ்கடல் மத்தியில் இராமேஸ்வரத்துக்கு 20 மைல் அண்மித்ததாக மனித நாகரீக வாழ்வுக்குத் தேவையான அனைத்து வளங்களையும், அரும்பெரும் மூலிகை வளங்களையும் கொண்டு அமைந்ததுதான் நெடுந்தீவு.

இத்தீவு பசுந்தீவு, பசுத்தீவு, பால்த்தீவு, மூலிகைத்தீவு ஆகிய காரணப் பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டதும் உண்டு.

இயற்கை எழில் நிறைந்து தென்னைகளினாலும் பனைகளினாலும் புல் தரவைகளாலும் செழிப்புற்றிருக்கும் நெடுந்தீவில் இருந்து பண்டைக் காலத்தில் நாள்தோறும் இராமேஸ்வரம் இராமநாத சுவாமிகள் (சிவன் கோவில்) ஆலய அபிஷேகத்துக்குப் பால் கொண்டுசெல லப்பட்டதாக அறியமுடிகிறது.

காராளர்களும் கடற்றொழிலாளர்களும் உத்தியோகத்தர்களும் வணிகர்களும் கலந்து றையும் வெடியரசர்கள் ஆட்சிசெய்த நெடுந்தீவில் வரலாற்று எச்சங்கள் பல காணப்படுகின்றன.

இயந்திரப் படகுகள் மூலம் பொதுமக்கள் போக்குவரத்து நிகழ்கிறது. சைவமும் கிறிஸ் தவமும் கைகோர்த்து நின்று ஆன்மீக வளர்ச்சியை மிளிரச் செய்கின்றன.

தொலைவில் அமைந்திருந்தாலும் தனது பண்பாட்டுத் தனித்துவத்தை பாதுகாத்து நிற்கும் பெருந்தீவு இதுவாகும்.

இங்குள்ள உயர் சைவ - கிறிஸ்தவ வேளாளர்கள் தங்களைத் தனிநாயக முதலி பரம் பரையினர் என பெருமை கொள்வர்.

அத்தகைய மரபு வழிவந்தவர்களுள், இராமநாத உடையார் பூட்டனும் மருதயினார் சுப்பிரமணியம் - தங்கச்சிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் ஆகிய குமாரசாமி, இராமநாத உடையார், புலவுடையார் பூட்டியும் கந்தப்பு மரகதமொழி தம்பதிகளின் மகளும் ஆகிய பொன்னம்மாவைத் தமது இல்லத்தரசியாக வரித்துக்கொண்டார்.

அமரர் குமாரசாமி அவர்களுடன் உடன் பிறந்தவர்கள்: பராசக்தி சின்னத்தம்பி, தையலம்மா பாலசிங்கம், பொன்னம்மா சண்முகம், கண்மணி ஐயாத்துரை, தனலக்ஷ்மி சோமசுந்தரம், கதிரவேலு, தியாகராஜா ஆகியோர்.

அமரர் பொன்னம்மா குமாரசாமி அவர்களுடன் உடன் பிறந்தவர்கள்: நாகேந்திரம், பார்வதி சபாபதிப்பிள்ளை, குமாரசாமி, சிவகாமிப்பிள்ளை கனகசபை, புஷ்பம் சிவசம்பு, வெற்றிவேல் (Solicitor), மருதயினார் (மருத்துவர்).

அமரர் பொன்னம்மா குமாரசாமி அவர்கள் தமது பெற்றோர் மற்றும் கணவர் சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டு, சகோதரர்களையும் அரவணைத்து அனைவரினதும் வீட்டுப் பணிகள் அனைத்திலும் முன்னின்று செயற்பட்டு ஆளுமைபெற்ற பெண்ணாகத் திகழ்ந்தார். பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும் குடும்பம் விளங்கச் செய்தார்.

இளமையில் கல்வி நின்றுபோனாலும் பெற்றோர் காட்டிய நன்னெறிகளையும் ஒழுக்கத்தையும் பின்பற்றி தனது சகோதரர்களையும் நெறிப்படுத்தி முன்மாதிரியாக விளங்கினார். 'பொன் போன்ற அம்மா' என ஊரவர்கள் கருதத் தக்கதாக தாயாகப் பணி புரிந்தார். கணவரின் காரியங்கள் யாவற்றிலும் கைகொடுத்து அவரது வெற்றிகளுக்கு உறுதுணையாகவும் இருந்தார்.

வீட்டுக்கு வருவோர் எவராயினும் அமரர் பொன்னம்மாவின் விருந்தோம்பலில் திளைத்துப் புகழ்ந்து செல்வதே வழமை.

மண்ணின் மாண்பும் பெண்ணின் பண்பும் மருவிய குணமுடைய அவர், "கோடி கொடுத்தும் கூடிப் பிறந்தார் தம்மோடு கூடுதல் கோடி பெறும்" என்ற ஔவையாரின் வாக்குக்கு இணங்க தமது அத்தனை பிள்ளைகளுக்கும் தங்களின் உறவுகளுக்குள்ளேயே திருமணம் முடித்துவைத்து உறவின் பெருமையை நிலைநாட்டியவர்.

அமரர்கள் குமாரசாமி - பொன்னம்மா தம்பதிகளின் இனிய இல்லறம் நல்லறமாக விளங்கியது. பத்தாவுக்கு ஏற்ற பதிவிரதையாக பொன்னம்மா குடும்பப் பொறுப்பை கணவன் மனம் கோணாமல் சிறப்புடன் மேற்கொண்டார்.

இவர்களுக்கு மகேஸ்வரன், நெடுஞ்செழியன், கிருஷ்ணமூர்த்தி, அமரர் கோபாலகிருஷ்ணன், இராஜேஸ்வரி, மதியழகன், தனலக்ஷ்மி ஆகியோர் பிள்ளைச் செல்வங்களாகக் கிடைத்தனர்.

மக்கள் செல்வத்தால் மனம் மகிழ்ந்த தம்பதியினர், பிள்ளைகளை கல்வி, கேள்விகளில் நெறி பிசகாது வளர்த்தெடுத்தனர்.

பொருட்செல்வத்திலும் அருட்செல்வத்திலும் அமரர் குமாரசாமி குடும்பத்தினர் ஊரில் தலைசிறந்து விளங்கினர்.

அமரர் குமாரசாமி பல்வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டவர். பலபேருக்கு தொழில் வாய்ப்புக்களைக் கொடுத்து வாழ்வித்தவர்.

1990-களில் போராட்டச் சூழ்நிலை காரணமாக நெடுந்தீவுக்கான படகுச் சேவை தடைப்பட்டபோது தமது மோட்டார் படகுகள் மூலம் நெடுங்காலமாகச் சேவையாற்றியவர். விவசாய மன்னனாகவும் விளங்கியவர்.

சிறிய - பெரிய உழவு இயந்திரங்கள் வைத்திருந்து தமக்கும் பிறருக்குமாகப் பயன்படுத்திய வேளைகளில் நெடுந்தீவு மக்கள் அதனால் பெரும் பயனடைந்தனர்.

தனது பிள்ளைகள், தம் சொற்படி தவறாது நடக்கும் பண்பைப் பேணிவந்ததால் அமரர்களான குமாரசாமி தம்பதிகள் இறும்பூதெய்தினர்.

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பதற்கிணங்க இவரது குடும்பம் சிறப்பும் மேன்மையும் கண்டது. இவர்களது பிள்ளைகள் சகலரும் இலண்டனிலேயே வாழ்ந்து வருகின்றனர். அமரர் குமாரசாமி தம்பதிகள் தமது இறுதிக் காலத்தில் இலண்டனில் தமது பிள்ளைகளுடன் வாழ்ந்து இயற்கை எய்தினார்கள்.

இவரது மூத்த மகன் மகேஸ்வரன், நெடுந்தீவைச் சேர்ந்த விதானையார் கணபதிப்பிள்ளை - சற்குணம் தம்பதிகளின் மகள் கிருஷ்ணவேணியைத் திருமணம் செய்து கிரிஷாந்தி (துளசி) என்ற பெண் பிள்ளையுடனும்,

நெடுஞ்செழியன், திரு.திருமதி பெருமையினார் (சந்தைக் கடை சின்னத்துரை) தம்பதிகளின் மகளான நவமலரை மணமுடித்து மணாளினி, மயூரன், நிரோஷன் ஆகிய நற்புத்திரர்களுடனும்,

கிருஷ்ணமூர்த்தி, சங்கீத பூஷணம் சுந்தரலிங்கம் - சரஸ்வதி தம்பதிகளின் மகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாமினியைத் திருமணம் செய்து அபிரா, மயூரா, மதிரா ஆகிய பிள்ளைச் செல்வங்களுடனும்.

இராஜேஸ்வரி, திரு.திருமதி கதிரேசு (பெரிய தோட்டம்) - சேதுப்பிள்ளை தம்பதிகளின் மகன் வரதராஜாவை மணமுடித்து Dr. இராஜலக்ஷ்மி, இராஜீவ்குமார், இராஜேந்தினி ஆகிய பிள்ளைகளுடனும்,

மதியழகன், திரு. திருமதி குமாரசாமி (தாய் மாமன்) - விக்கினேஸ்வரி தம்பதிகளின் மகள் ஜெயந்தியைத் திருமணம் செய்து லக்ஷனா, லக்ஷ்மன், ஹரிஸ் ஆகிய பிள்ளைகளுடனும்,

தனலக்ஷ்மி, திரு. திருமதி குமாரசாமி (சந்தைக் கடை - ஐயா) தவமணி தம்பதிகளின் மகன் சோதிராசாவை திருமணம் செய்து பரணி, பார்த்திபன், பிரகலாதன், கஸ்தூரி ஆகியோருடனும் சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர்.

இறுதிக் காலத்தில் அமரர்கள் இருவரும் இலண்டன் சென்று பிள்ளைகள் - பேரப் பிள்ளைகளுடன் வாழ்ந்துவந்த வேளையில் அமரர் குமாரசாமி அவர்கள் 19.07.2010 அன்று திடீரென இறைவனடி சேர்ந்ததை அடுத்து அமரர் பொன்னம்மா அவர்கள் நிலை குலைந்து போனார்.

அறுபது ஆண்டு கால தாம்பத்திய வாழ்வில் ஒருவரை ஒருவர் பிரியாது, அன்றில் பறவை போன்று வாழ்ந்தவர்கள் அமரர்கள் குமாரசாமி - பொன்னம்மா தம்பதிகள்,

இந்த நிலையில், அமரர் குமாரசாமி அவர்கள் மறைந்து சரியாக 3 மாதங்களில் அமரர் பொன்னம்மா அவர்களும் 02.11.2010 அன்று இயற்கை எய்தினார்.

நிலவுலக வாழ்க்கை நிலையற்றதென்பதை நாம் அறிவோம். இலண்டன் மாநகரில் அமரர்களின் இறுதிச் சடங்குகள் உற்றார், உறவர், நண்பர்களுடன் நடைபெற்றன. அன்பினால் ஆட்பட்ட கணவனும் மனைவியும் இறைவனின் திருவடிகளில் மீளா ஓய்வு கண்டு சரணடைந்தனர்.

அன்பின் இருப்பிடமாகத் திகழ்ந்த அமரர்கள் குமாரசாமி - பொன்னம்மா தம்பதிகள் ஆண்டவன் அடிதனில் அமைதிபெற இறைவனை வேண்டுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையும் பிதாவும்

இந்தப் பிரபஞ்சத்தில் பிறப்பு - இறப்பு எனும் தொடர் நிகழ்வுகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

இதற்குக் காரணம் என்ன?

நாம் நாமாகப் பிறக்கவில்லை. வேறொரு சக்தி எம்மைப் பிறக்கவைக்கிறது. அதே சக்தி எம்மை வாழவும் வைக்கிறது. ஆனால் நாம் இங்கேயே நிலைத்து நிற்கவும் போவதில்லை.

இவ் வாழ்க்கை தற்காலிகமானது. நாம் இவ்வுடலை விட்டுப் போகும்போது இறைவனைச் சென்றடைவோம்.

உயிர்கள் ஆணவ மலத்தில் கட்டுண்டு கிடந்தன. மலங்களை நீக்கி ஆன்மாவைத் தன்னோடு சேர்ப்பதற்காகவே இறைவன் நமக்கு உடலைத் தந்து இவ்வுலகில் உலவ விட்டுள்ளான். இவ்வுடலை எடுப்பதற்குக் காரணம் தந்தை. தாங்குபவள் தாய். இருவரும் சேர்ந்து இறைவனிடம் தவம் இருந்து எம்மைப் பெற்றதனால் அவர்கள் பெற்றோர்.

தந்தை, தாய் இருவருமே எமக்கு ஆன்மீகத் தொடக்கப் படியை அமைத்துத் தருபவர்கள்.

அறிவு, ஆற்றல், தெய்வ சிந்தனை, பாசம், பற்று இவைகளை இறைவன் அருளோடும் தாய் - தந்தையின் வழிகாட்டலினாலும் பெறுகிறோம். இறைவனோடு இணையும் நோக்கத்தை அடைகிறோம். அதனாலேதான் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பர்.

சுபம்.

- **ஸ்ரீவஸ்ரீ சபேசக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயர் வளவு பொன்னம்மா - என்னம்மா

என்னைப் பெற்ற அம்மா 1945-ம் ஆண்டு மறைந்துவிட்டதாக பல ஆண்டுகளுக்குப் பின் எனக்குத் தெரிய வந்தது.

என்னைப் பெற்ற அம்மா இறக்கும்போது எனக்கு 3 வயது.

என்னைப் பெற்ற அம்மாவின் முகத்தையோ எனது ஏனைய சகோதரர்களின் முகத்தையோ அடையாளம் தெரியாத வயது.

ஆயினும் பொன்னம்மாதான் என் அம்மா ஆகிவிட்டா.

என்னைப் பெற்ற அம்மா மறைந்ததால் ஏற்பட்ட வெற்றிடத்தை என்னம்மா பொன்னம்மா உடனடியாக நிரப்பி விட்டா என்பதை நான் 5ஆவது அல்லது 6ஆவது வயதில் உணர்ந்து கொண்டேன்.

நாங்கள் மொத்தத்தில் பத்து பேர். இருவர் இறந்து விட்டதால் - இவர்களை எனக்குத் தெரியாது எஞ்சியவர்கள் எட்டு பேர்.

எல்லோருக்கும் தாயானவள் என்னம்மா பொன்னம்மா.

எனது தந்தை தாரமிழந்து தத்தளித்தபோதும் நான் பெற்ற தாயை இழந்து பரிதவித்தபோதும் குடும்பப் பாரத்தைச் சுமந்தவள் என்னம்மா பொன்னம்மா.

அவள் தன் கல்வியை இழந்தாள் - சுகபோகங்களை இழந்தாள் - இளவயதில் கல்யாணத்தை இழந்தாள் - நித்திரையை இழந்தாள் - உரிய நேர உணவை இழந்தாள்.

தந்தையையும் சகோதரங்களையும் சுமந்தாள்.

பெயர்வளவுக்காரி - மரகதமொழி எங்களைப் பெற்றவள்.

பெயர்வளவுக்காரி - அந்தப் பெயர் அவள் பெற்ற பொன்னம்மாவான என்னம்மாவுக்கும் பின்னர் வழங்கலாயிற்று.

எனது வயது கூடக்கூட என்னைச் சுற்றியுள்ளவர்களையும், பெயர்வளவில் நடைபெறுபவற்றையும் சிறிது சிறிதாக அடையாளம் காணக்கூடியதாகிவிட்டது.

என்னம்மாவின் மடிமீதும் தோள்மீதும் முந்தானைக்குள்ளும் புகுந்துகொள்வதே எனது பொழுதுபோக்கு.

இவையெல்லாம் எனக்கு பசுமரத்தாணிபோல் இன்றும் இழையோடுகின்றன.

எனக்கு வயிற்றுவலி அடிக்கடி வரும். அப்போதெல்லாம் முன் வீட்டு காத்தி வைத்தியரிடம் மருந்து வாங்கி வந்து தனது மடியில் வைத்து அந்த மருந்தைப் பருக்குவா.

மேலும் வைத்தியரிடம் வருகைதரும் சகல குழந்தைகளுக்கும் அவவே மருந்து பருக்குவா. அதில் அவவுக்கு நிகர் அவவே. அவவின் இச் சேவையின் பலனாக பேர்த்தி ராஜினி அவவின் ஆசியுடன் மருத்துவப் படிப்பை முடித்து வைத்தியத் தொழிலில் ஈடுபட்ட சிறப்பையும் கண்டா.

நான் பள்ளிச் சிறுவனானேன். இப்பொழுது எனது மற்றைய சகோதர சகோதரிகளும் என்னம்மாவை பெரியக்கா என அழைக்க, நானும் என்னம்மாவை பெரியக்கா என அழைக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டப்பட்டேன். ஆயினும் என்னம்மாவுக்கோ அல்லது எனக்கோ தாயும் தனயனும் என்ற உளரீதியிலான உறவு இன்று வரையும் அழியவில்லை

என்னைக் கண்டித்து வளர்த்த பாங்கை நான் உணர்கிறேன் - என்னை அரவணைத்த பாங்கை உணர்கிறேன் - என்னைக் குளிப்பாட்டி விடுவதை உணர்கிறேன் - சிறு வயதில் எனது கணைக் கால் முழுவதிலும் சிரங்கு, அதை கதறக் கதறக் கழுவி விடுவதை உணர்கிறேன். பள்ளிக்கூடம் விட்டு பிந்தி வீடு வந்தால் அல்லது கடலில் குளித்துவிட்டு வீடு வந்தால் பாழைத் தாரால் அடி வாங்கியதை உணர்கிறேன் - இவை யாவும் தாய்மையின் வாஞ்சையால் எனக்குக் கிடைத்தவை.

என்னம்மா பொன்னம்மா என்னில் கொண்டிருந்த பாசத்தில், கல்யாணம் கட்டி ஏழு பிள்ளைகளைப் பெற்றிருந்தாலும் என்னைத் தனது மூத்த பிள்ளையாகவே வைத்திருந்தார்.

இதை அவவின் பெற்ற பிள்ளைகள் நன்கு அறிவர். நானும் அவவின் பெற்ற பிள்ளைகளை எனது சொந்தச் சகோதரர்களாகவே இன்றும் பேணி வருகிறேன். இவற்றை எழுதும்போது என் கண்கள் குளமாகின்றன.

ஜீ.சி.ஈ. சாதாரண பரீட்சையில் மகா வித்தியாலயத்தில் முதன்மைச் சித்தி பெற்றுத் தேறியதால் என்னை அப்போதைய அதிபர் நவரத்தினசிங்கம் உயர் தரத்தை யாழ்ப்பாணம் சென்று படிக்குமாறு வலியுறுத்தினார். அதன் பொருட்டு யாழ் சென்று ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சேர விரும்பினேன். அதற்கு நிறைய பணம் தேவைப்பட்டது. செய்வதறியாது நான் சுருண்டு படுத்துவிட்டேன். இரண்டு நாட்கள் ஊண் இல்லை உறக்கம் இல்லை. அப்போது பெரியக்கா என அழைக்கப்படும் என்னம்மா பொன்னம்மா கேட்டா: "ஏன் இப்படி கிடக்கிறாய் - எங்களிடத்தில் அவ்வளவு பணம் இருக்கா?" நான் எதுவும் பேசவில்லை, திரும்பிப் படுத்துக் கொண்டேன். இது தாய்க்கும் தனயனுக்கும் ஏற்பட்ட ஊடல்.

சில மணித்தியாலத்தில் வந்து 'இந்தா, இவ்வளவுதான் இருக்கு' எனக் கூறிக்கொண்டு பணத்தை தலைமாட்டில் வைத்தா.

ஐயோ! இன்று போய்விட்டாவே! கண்கள் குளமாகின்றன

மறுநாள் நான் யாழ்ப்பாணம் சென்று - வடலியடைப்பில் இருந்த பெரியண்ணன் வீட்டுக்குப் போய் அங்கிருந்து கந்தரோடையில் உள்ள ஸ்கந்தவரோதய கல்லூரியில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தேன். இது தாய்மையின் தத்துவம்.

என்னைத் தலைமகனாக ஏற்றுக் கொண்டதற்கு ஏராளமான சம்பவங்கள் உண்டு.

நான் கொழும்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்த வேளைகளில் தான் நோய்வாய்ப்படும்போதெல்லாம் மருதுவைக் கொண்டு வாருங்கள் என்று கோரிக்கைவைப்பது வழமையான விடயம்.

என்னைக் கண்டதும் நோய்கள் பறந்து விடும். எந்த வகையான துக்கத்திலோ துன்பத்திலோ இருக்கும்போதும் மருது வந்து விட்டால் அவவின் முகம் மலர்ந்து விடுவதைப் பார்த்துப் பலரும் வியப்பார்கள். இவை யாவும் மருதுதான் எனது தலைமகன் என்பதைப் பறைசாற்றும் - என்னம்மா பொன்னம்மாதான்.

மச்சான் குமாரசாமியும் எனக்கு ஒரு பாரிய வழிகாட்டியாகவே இருந்தவர்.

என்னையும் தனது தம்பி தியாகுவையும் வழிநடத்தியவர். துரதிருஷ்டவசமாக தியாகு இன்று இல்லை.

எங்களை அதிகாலை எழுந்து பணிகளைக் கவனிக்க வைத்ததன் மூலம் எங்களுக்கு உலக நிலவரங்களைப் புரிய வைத்தவர்.

உடல் உழைப்பென்றால் என்ன என்ற தத்துவத்தை எமது சிறு பராயத்திலேயே புகட்டியவர். அவர் பெரியக்காவைத் திருமணம் செய்த காலத்தில் எங்கள் தகப்பனார் கந் தப்புவும் (அவரை யாவரும் பவுணர் என்று அன்பாக அழைப்பதுண்டு) பவுணர் கடை என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபார நிலையத்தை நடத்திவந்தார். அக்காலத்திலிருந்தே சகல விவசாய - வியாபார தந்திரோபாயங்களை காலப்போக்கில் உள்வாங்கி, குமரன் ஸ்தாபனத்தை நிறுவி நெடுந்தீவில் தலைசிறந்த தொழில் அதிபராக விளங்கினார்.

பலருக்கு தொழில் வாய்ப்பை உருவாக்கி மக்களை வளப்படுத்தினார்.

ஏவராக இருந்தாலும் வாழ்க்கையில் உயர்வடைவதற்கு உதவிகளை வழங்க அவர் பின்னிற்பதில்லை.

அவர் இறுதி வரைக்கும் செல்வந்தராகவே வாழ்ந்தார். அவரின் பெருமைகளுக்கு உறுதுணையாக இருந்தவர் என்னம்மா பொன்னம்மாதான் என்பது மிகையல்ல.

இவர்கள் இருவரதும் ஆன்மா இறைவனடியில் சங்கமமாக வேண்டி நிற்கும்

- தம்பி மருது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைந்த நினைவுகள்

மைத்துனராய் - அயலவராய் - பள்ளித் தோழராய் - இணைபிரியா வாலிப நண்பராய் மச்சான் குமாரசாமியும்,

என் உடன்பிறந்த சகோதரி போல் தன்னை வரித்துக் கொண்ட என் அக்கா ஒரு நாள் ஒரு பொழுது காணாதுவிட்டால் கதிரேசு எங்கே? எனத் தவிக்கும் பாசத்தின் இமயம்.

என்அக்கா பொன்னம்மாவும் உறவுகள் குடும்பங்கள் பிரிந்துவிடக் கூடாது என்பதையே நோக்கமாகக் கொண்டு எம்மைச் சம்மந்தியாக்கி எங்களது ஏற்றத் தாழ்வுகளுடன் இரண்டறக் கலந்து முடிவு வரை வாழ்ந்த வாழ்க்கை என்றுமே நிறைந்த நினைவுகள்.

அன்புறவுகளின் மீளாய்த் துயிலில் வாடும் எம் அன்பு மருகச் செல்வங்களுக்கும் அனைத்துப் பேரர்களுக்கும் எம் ஆறுதல் கூற்றும் அனுதாபமும் உரித்தாகட்டும்.

மைத்துனரினதும் அக்காவினதும் ஆத்ம சாந்திக்கு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

- கதிரேசு குடும்பத்தினர்

# துயரில் பங்குகொள்கிறோம்

அண்ணாரினதும் அக்காவினதும் மரணச் செய்திகேட்டு நாங்கள் மிகுந்த துயரமடைந்துள்ளோம். இச் செய்திகள் எங்களுக்கு ஈடுசெய்யமுடியாத உறவின் இழப்புகளாகும்.

அவர்களுடைய இறுதிச் சடங்குகளில் நாம் கலந்துகொள்ளமுடியாத நிலையில் இருப்பதையிட்டு எமது துயரத்தையும் ஆழ்ந்த இரங்கலையும் உங்களுக்கும் மற்றும் உங்கள் சகோதரர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

உங்களின் துயரத்தில் எங்கள் குடும்பமும் பங்குகொள்வதுடன், அவர்களது ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**– நா. கணபதிப்பிள்ளை, சற்குணம்**
**குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் சிறக்க வாழ்ந்த உத்தமர்கள்

நெடுந்தீவைச் சேர்ந்தவர்களும், இலண்டனில் சமீபத்தில் காலம் சென்றவர்களான திரு குமாரசாமி, அவரது மனைவி திருமதி பொன்னம்மாவும் பல காலம் நெடுந்தீவில் சிறப்புடன் வாழ்ந்தவர்கள்.

இவர்கள் நெடுந்தீவில் மிகவும் புகழ் பெற்று நல்லாட்சி நடத்திய நெடுந்தீவு கிழக்கு உடையாரின் வழித்தோன்றல்கள் ஆவார்கள். இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன் (1815 அளவில்) நெடுந்தீவுப் பிரிவில் அரசினால் நியமனம் செய்யப்பெற்று மக்கள் மகிழ்வுடன் வாழும் வகையில் ஆட்சி புரிந்த திரு சுப்பிரமணியம் இராமநாதர் உடையாரின் புதல்வர்களில் ஒருவரான சின்னர் என்று மக்களால் அழைக்கப்பட்ட மருதையனார் என்பவரின் முதல் புதல்வன் சுப்பிரமணியம் ஆகும். நற்குண நற்பண்புகளுடைய அவருக்கு முதல் மகனாக குமாரசாமி பிறந்தார்.

இவர் இதே குடும்பத்தைச் சேர்ந்த கந்தப்பு என்பவரின் மகள் பொன்னம்மாவைத் திருமணம் செய்து ஏழு பிள்ளைகளைப் பெற்று வளர்த்தார். குமாரசாமி இளமையிலேயே தனது தகப்பனுடன் இணைந்து விவசாயம், வியாபாரம் போன்றவற்றில் ஆர்வத்துடன் செயற்பட்டு வந்தார். "நேரம் பொன்" என்ற கருத்தை எப்போதும் மனதில் கொண்டு மிகுந்த சிரத்தையோடும் ஆர்வத்தோடும் பல தொழில்களை முன்னெடுத்து செய்து வந்தார்.
மூத்த மகன் மகேஸ்வரனை (ராசா) லண்டன் அனுப்பி கல்வி கற்பித்தார். அதே போல் எல்லாப் பிள்ளைகளுக்கும் உரிய கல்வியைக் கற்பித்தார். பிள்ளைகளும் தகப்பனாருடன் இணைந்து அவருடைய தொழில்களின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டி உழைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த மகனுக்கு மக்கள் வங்கியில் கடமையாற்றிக்கொண்டிருந்த எமது மகள் கிருஷ்ணவேணியை (வேணி) பெற்றோர் உறவினர் ஆசியோடு திருமணம் செய்த வைத்தனர். அவ்வாறே எல்லாப் பிள்ளைகளுக்கும் உறவுக்குள்ளே சிறப்பாக திருமணம் செய்து வைத்தார்கள்.

திருமதி பொன்னம்மா ஊரில் வாழ்ந்த காலத்தில் உறவினர்களுடனும் அயலவர்களுடனும் மிகவும் பாசமாகவும் வீட்டிற்கு வருபவர்களை நன்கு உபசரித்தும் வாழ்ந்தமையால் ஊர் மக்களும் அவர் மீது மிகமிகச் சிறந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தனர்.

தாயைச் சிறு வயதில் இழந்தமையால் தனது சகோதரர்களையும் அன்பாக வளர்த்து திரு வெற்றிவேல் சட்டத்தரணியாகவும், திரு மருது வைத்தியராகவும் மற்றும் குமாரசாமி அம்மாபிள்ளை புஸ்பம் அனைவரும் அவரவர் குடும்பத்துடன் லண்டனில் சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர்.

அவர்கள் அனைவருக்கும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்புடன்,

**திரு நா.கணபதிப்பிள்ளை**
**(இளைப்பாறிய கிராம சேவையாளர் - விதானையார்)**
**திருமதி சற்குணம் கணபதிப்பிள்ளை**
**(இளைப்பாறிய ஆசிரியை)**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுட நேயன் குமாரசாமி

மனிதன் நிலையற்றவன். ஆனால் மனிதம் நிலையானது.

மானுடநேயமே மனிதத்தின் மிக உன்னதமான அடையாளம்.

வையத்துள்ள வாழ்வாங்கு வாழ்பவன்வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான் என்கிறார் தமிழ் மறையின் பிதாமகர் திருவள்ளுவப் பெருமான்.

வானுறையும் தெய்வத்துள் வைத்து என்றென்றும் நினைவுகூரப்பட்டு பூசிக்கப்படும் ஒருவனாக ஒரு மனிதன் இருப்பானேயானால் அவன் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து வரலாறான ஒருவனாக இருக்கவேண்டும்.

அத்தகைய மாமனிதர்கள் கலாதிகாலத்துக்கு அவர் சார்ந்த சமூகத்தால் நினைக்கப்படுவார்கள் - மறைந்த பின்னரும் அவரது வாழ்வியல் பண்புகள் - இயல்புகள் - செயற்பாடுகள் குறித்து வாழும் மனிதர்களால் புகழ்ந்து பேசப்படுவார்கள்.

காலமும் விதியும் கடின உழைப்பாளி ஒருவனுக்குக் கை கொடுக்குமாயின் எத்தகைய நிலையில் இருந்தாலும் வாழ்வின் உன்னதங்களை எட்டுவான் என்பது மானுட வரலாறு உணர்த்தி நிற்கும் மகத்தான பாடமாகும்.

அத்தகைய ஒரு மானுட சீலனாகவே அமரர் சுப்பிரமணியம் குமாரசாமி அவர்களை நெடுந்தீவு மக்கள் மதித்து அவரது மறைவின் பின்னரும் நினைக்கின்றார்கள் என்றால் அது அவரது வாழ்வியல் செயற்பாடுகளின் தாக்கத்தின் பாற்பட்டதே ஆகும்.

எளிமையான உழைப்பாளியான அமரர்கள் திரு. திருமதி சுப்பிரமணியம் தம்பதிகளுக்கு மூத்த மகனாக நெடுந்தீவு மண்ணில் பிறந்த குமாரசாமி அவர்கள் உழைப்பும் உணர்வும் உயர்வை நோக்கிய செயற்பாடுகளுமே அவரை ஒரு உன்னத புருஷனாக்கியது என்பதே உண்மையாகும்.

இளமைப் பருவத்தில் அவரது ஆரம்ப கல்வியை, அதாவது சிரேஷ்ட பாடசாலைப் பரீட்சைவரை, தான் பிறந்த மண்ணாகிய நெடுந்தீவிலேயே கற்றார்.

இளம் வயதிலேயே வர்த்தககம், விவசாயம் ஆகிய துறைகளில் ஆர்வம் கொண்டவராக விளங்கிய அமரர் குமாரசாமி அவர்கள் கடுமையாக உழைக்கும் தன்னம்பிக்கையுடன் கூடிய மனிதராக தன்னைத் தானே உருவாக்கிக் கொண்டார்.

உரிய காலத்தில் தனது மரபுவழி உறவினரான அமரர்கள் திரு. திருமதி கந்தப்பு தம்பதிகளின் மூத்த மகளான பொன்னம்மாவைத் திருமணம் செய்துகொண்டு இல்லற வாழ்வில் இணைந்து நல்லறம் பேணத் தொடங்கினார். இல்வாழ்க்கை சீரும் சிறப்புடனும் திகழ நன்மக்களும் பிறந்தனர்.

பிற்காலத்தில் நெடுந்தீவுக்கே உரியதான விவசாய உற்பத்திகளை மேம்படுத்தி இரசாயனக் கலப்பற்ற விளைபொருட்களை உற்பத்தி செய்தார்.

இந்த உற்பத்திப் பொருட்களை அவரது 'குமரன்ஸ்' ஸ்தாபனத்தின் ஊடாக தலைநகர் வரை சந்தைப்படுத்தினார். நெடுந்தீவு மக்களிடமும் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து அவர்களது சந்தைப்படுத்தலுக்கும் பேருதவி புரிந்தார்.

சமகாலத்தில் பிள்ளைகளின் கல்வியில் அதீத கவனமெடுத்து மேற்படிப்புக்காக இலண்டன் வரை அனுப்பிவைத்தார்.

'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை

என் நோற்றான் கொல் எனும் சொல்' - என்ற குறள் வழிநின்று அம்மக்களும் தம் பெற்றோரை - அமரர் குமாரசாமி - பொன்னம்மா தம்பதியினரை இங்கிலாந்துக்கு அழைத்து அவர்களது பெயரிலேயே 'குமரன்ஸ்' என்ற வர்த்தக ஸ்தாபனத்தை ஆரம்பித்து அதனை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பை தமது தந்தையிடம் கையளித்து அவரை மேன்மைப்படுத்தினர்.

அந்நிய மண்ணில் அயராது உழைத்து தேடிய செல்வத்தை சொந்த மண்ணின் வளர்ச்சிப் பணிகளுக்கு உதவிய பெருமையும் குமாரசாமி அவர்களுக்கே உரியதாகும்.

நெடுந்தீவு வாழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களது பொருளாதார வளர்ச்சியின் மேம்பாட்டுக்கு வழிவகுத்தார்.

மக்கள் பணியில் மட்டுமல்லாது தெய்வத் திருப்பணிகளுக்கும் அவரது கரங்கள் வரையாது வழங்கின. இலண்டனில் இருந்து கொண்டே நெழுவினி விநாயகர் மற்றும் கரமத்தை கந்தசாமி கோவில் புனருத்தாரணப் பணிகளுக்காகவும் உதவினார்.

அது மட்டுமல்லாது நெடுந்தீவில் அமைந்துள்ள ஏனைய சைவ ஆலயங்களுக்கும் நிதி உதவி செய்து திருக்குளங்களைப் புனரமைப்பதற்கும் உதவினார். இந்த வகையில் அமரரின் திருத்தொண்டு மிகப் பெரியது.

திருவருள் கைகூடிய அவர் இறையருளும் மிக்கவராக இருந்தார். அதனால் அவரது இல்லற வாழ்வு அனைத்துப் பேறுகளையும் கொண்டதாக இருந்தது.

இவரது புத்திரச் செல்வங்களான நான்கு ஆண்களும் இரண்டு பெண்களும் இலண்டனில் சீரும் சிறப்புடன் வாழ்ந்து வரும் திருப்தியுடன் இறைவனடி சேர்ந்தார்.

சிவபதமடைவதற்கு சில தினங்களுக்கு முன்னரும் தமது தாய் மண்ணுக்கு - சொந்த ஊருக்கு வந்து தனது உறவினர்கள் அனைவரையும் சந்தித்து மகிழ்ந்து, இறுதி விடை பெற்று இலண்டன் திரும்பினார்.

அன்னாரின் திடீர் மறைவு எனக்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்த நெடுந்தீவு மக்களுக்கும் பேரிழப்பாகும்.

இவரது வாழ்வின் வெற்றிகளுக்கெல்லாம் உறுதுணையாக இருந்து இவரின் அருமைத் துணைவியார் திருமதி பொன்னம்மாவும் தலைவன் வழி தலைவி என்பதைப் போன்று பொதுச் சேவைகளிலும் சக மனிதர்களுக்கு உதவிகளை வழங்குவதிலும் அனைவர் மீதும் அன்பும் பாசமும் கொண்டவராகவும் இறை பக்தியில் மேம்பட்டவராகவும் வாழ்ந்தார்.

இவர்களின் பிரிவால் இதயம் துயரால் மூழ்கியுள்ளது.

இறையின் இறையடி நிழலில் ஈடில்லா அமைதியையும் சாந்தியையும் இவர்களின் ஆத்மா பெறட்டும்.

**அ. த. அம்பலம்**

முன்னாள் கிராம சபைத் தலைவர், அகில இலங்கை சமாதான நீதவான்

- நெடுந்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகி

திருவளரும் கறவையினம் மடிசொரிந்து
    வழிநெடுகச் செழும்பாலைச் சிந்தும் நாடு
திரைவாரி வாரிவந்து வலம்புரியை அரணாகச்
    சேர்த் தார்த்து மகிழு நாடு
மருவளரும் பொற்சீந்தில் உணவுண்டு நீடாயுள்
    மலிந் துயிர்கள் மறையா நாடு
மதகுரவர் கன்னியர்கள் துறவிகளை நனிதீன்று
    மரபுகள் விரித்த நாடு
கருவளரும் கலைவாணர் புலவோர்கள் பேரறிஞர்
    கணக்காளர் மிகுந்த நாடு
காவலனாம் வெடியரசன் கோட்டையும் பரிப்படையும்
    காட்சிதரு தேவநாடு
தருவளரும் திருநாடு வருவோரை ஆதரிக்கும்
    தன்மையினில் முதன்மை நாடு
தரையில் நிகரில்லா நெடுந்தீவு எனப் புலவர்
    சாற்றிடும் பெரிய நாடே!

- எனக் கவிஞர்களால் புகழ்ந்து பாடப்பட்ட நெடுந்தீவெனும் பசுத்தீவு யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடக்கே காணப்படும் சப்த தீவுகளில் ஒன்றாகும்.

பல்வகை வளங்களையும், சீரினையும், சிறப்பினையும் உடைய இத்தீவு அந்நியர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களில் படிப்படியாக தன் சிறப்பெலாம் இழந்து 'தாழ்வுற்று வறுமை மிஞ்சிய நிலையினை வரலாறுகள் எடுத்துக் கூறுகின்றன. இவ்வூரின் பல்வகை வளங்களையம் கண்டு, தொண்டை மண் டலத்திலுள்ள செய்யூரிலிருந்து கி. பி. 1365-ல் அப்போது சோழநாட்டை ஆண்ட மன்னரின் ஆணையில் தனிநாயக முதலியும் அவரது பரிவாரங்களும் இங்கு குடியேறினார்கள்.

இப்படி இந்த இரு மரபுந்துய தனிநாயக முதலியின் வாழையடி வாழையென வந்த வழித்தோன்றலான மருதயினார் சுப்பிரமணியம் - தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் மூன்றாவது பிள்ளையாக - மூத்த மகனாகப் பிறந்தவர்தான் நம் அனைவரின் அன்புக்குரிய அமரர் ம. சு. குமாரசாமி அண்ணர். இவருடன் ஐந்து பெண்களும் இரண்டு ஆண்களும் உடன் பிறப்புகளாவர்.

1930-இல் இருந்து நெடுந்தீவின் வரட்சி காரணமாக பல்வகை வளங்களும் குறையத் தொடங்கின. இலங்கையின் ஆட்சியாளர்கள் நெடுந்தீவு மக்களை வன்னி, கிளிநொச்சிப் பிரதேசங்களில் 'காடு திருத்தி களனிகள் ஆக்கி, குளம் தொட்டு வளம் பெருக்க' குடியேற்றினர். வளம் குறைந்து போகின்ற நெடுந்தீவில் வாழ முடியாது என்று பலர் இடம் பெயர்ந்து குடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேறினர். ஆனால் குமாரசாமி அண்ணர் போன்ற சிலர் 'பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே' என எண்ணி, 'என்ன வளமில்லை எங்கள் திரு நாட்டில் ஏன் செல்ல வேண்டும்' என்னும் திடமான எண்ணத்துடன் உழைப்பால் உயர்ந்த உத்தமர்.

இவ்வூரின் பலவகை வளங்களைப் பயன்படுத்தி, நூற்றுக் கணக்கான கால்நடைகளின் உரிமையாளராகவும், சிறந்த விவசாயியாகவும், தீவில் கிடைக்கும் மூலப் பொருட்களை வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்து பலருக்கு தொழில்கள் வழங்கிய தொழில் அதிபராகவும் விளங்கினார். பெரும் செல்வச் சிறப்புடன் வாழ்ந்த இவர், 'இல்லையென்று சொல்லி வந்தார்க்கு இல்லை' என்று சொல்லாத மனம் படைத்தவராக வாழ்ந்தார்.

'தாம் மட்டும் வாழ்ந்தால் வாழ்வல்ல' என்று எண்ணிய இவரின் பெற்றோரும், உறவினரும், நெடுந்தீவு கிழக்கில் பல்வகைச் சிறப்புகளுடன் வாழ்ந்த அமரர் கந்தப்பு மரகதமொழியாள் என்பவர்களின் மூத்த புதல்வி பொன்னம்மா என்பவரைத் திருமணம் செய்து வைத்தனர். நாலு ஆண்களையும், நாலு பெண்களையும் கொண்ட குடும்பம் - இவர்கள் அனைவரையும் அன்புடன் அரவணைத்து

'அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது' - என்ற வள்ளுவர் வாக்குக்கு ஏற்ப இல்லறத்தை நன்றாக நடத்தினர்.

'ஓர் ஆணின் முன்னேற்றத்திற்குப் பெண்ணானவள் பின்னால் நிற்கின்றாள்' என்பது இவரின் வாழ்வில் உண்மையானது.

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணி தகை சார்ந்த
சொற்காத்துச் சோர்விலாள் பெண்' என்ற திருக்குறளின் இலக்கியத்துக்கு இலக்கணமாக விளங்கினார் பொன்னம்மா.

இல்லறத்தின் பயனே நல்ல பிள்ளைகளைப் பெறுதல். அவர்களின் இல்லறமாகிய நல்லறத்தில் நாலு ஆண்களும், இரண்டு பெண்களும் பிறந்தனர். நெடுந்தீவுக்குப் பெருமை சேர்க்கும் விருந்தோம்பல் பண்பு இவ்வில்லத்தில் தனிச் சிறப்புடன் விளங்கியது.

பாலும், மோரும், தயிரும், நெய்யுமானவற்றையும் சாமை, மொண்டி, வரகு போன்ற சிறு தானியங்களையும், புளுக்கொடியல், பனாட்டு போன்ற கற்பகதருவின் உணவுப் பொருட்களையும் பலருக்கும் இல்லை என்று சொல்லாது கொடுத்து உதவினர்.

'உற்றவர் நாட்டவர் ஊரார் - இவற்கு
உண்மைகள் கூறி இனியன செய்தல்
நற்றவர் ஆவது கண்டோம் - இதில்
நல்ல பெருந்தவம் யாதொன்றும் இல்லை
பக்கத்திலிருப்பவர் துன்பம் - தன்னை
பார்க்கப் பெறாதவன் புண்ணியமூர்த்தி
ஒக்கத்திருந்தி உலகோர் - நலம்
உற்றிடும் வண்ணம் உழைப்பவர் யோகி'

- என்ற பாரதியாரின் அமுத வாக்கு இக்குடும்பத்திற்கு முழுவதும் பொருந்தும்.

தான் பிறந்த மண்ணின் மக்கள் கடற் பயணத்தில் படும் சொல்லொணாத் துன்பங்களைக் கண்டு கடற் பயணத்துக்காக இரண்டு படகுகளை தன் சொந்தச் செலவிலேயே உருவாக்கி 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என அன்புப் பணி புரிந்தார்.

'நிலத்தியல்பு பயிரின் தன்மை' ஆகுமென்ற ஆன்றோரின் வாக்குக்கு ஏற்ப அவர்களின் பிள்ளைகள் ஐரோப்பிய நாட்டில் பிரபல தொழிலதிபர்களாகவும், பல்வேறு நிறுவனங்களின் முகாமையாளர்களாகவும் திகழ்கின்றனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி பொன்னம்மா அவர்களின் அன்புச் சகோதரர்களும், சகோதரிகளும் வழக்கறிஞராகவும், வைத்திய கலாநிதியாகவும் மற்றும் பல்வகைச் சிப்புகளுடனும் வளமுடன் வாழ்கின்றனர். இச்சந்தர்ப்பத்தில் அமரர் குமாரசாமி அவர்களின் சிறிய தந்தையார் அமரர் ம. கணபதிப்பிள்ளை அவர்களின் சமுகப் பணிகளை எம் தீவக மக்கள் என்றுமே மறக்க முடியாது.
நெடுந்தீவின் கிராம சபைத் தலைவராக இரண்டு முறையும், நெடுந்தீவுப் பிரஜைகள் குழுவின் தலைவராகவும் விளங்கிப் பல இளைஞர்கட்கு அரச, மற்றும் அரச கூட்டுத்தாபனங்களிலும் உத்தியோகங்களைப் பெற்றுக் கொடுத்தார்.
அவ்வாறே திருமதி பொன்னம்மா அவர்களின் சிறிய தந்தையார் அருட்சகோதரர் என். என். மரியதாஸ் அவர்கள் புனித வளனார் துறவற சபையின் கத்தோலிக்க துறவியாக விளங்கினார். புகழ் பெற்ற கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளராக சிறப்பாகப் பணியாற்றி நல்லாசிரியர் பலரை உருவாக்கிப் பெருமை பெற்ற பேரறிஞர். கிழக்கு மாகாணத்தில் பல உயர்தரக் கல்லூரிகளில் அதிபராக விளங்கி பெருமை பெற்ற பெருந்தகையாளர்.
பிறந்த மண்ணை விட்டுப் பிரிந்து செல்ல மனமின்றி பிள்ளைகளின் வேண்டுதலை மறுக்க முடியாமல் இருவரும் இங்கிலாந்து சென்று இறுதி காலம் வரை அன்புத் தம்பதியராய் வாழ்ந்து அமரத்துவம் அடைந்தனர்.
இவர்களின் இழப்பினால் பிள்ளைகள், சகோதர சகோதரிகள் மட்டுமல்லாது உற்றார், உறவினர், நண்பர்கள் மட்டுமின்றி இவர்களை அறிந்தவர்கள் அனைவருமே துன்பமும், துயரமும் அடைந்தனர். சிறப்பாக நெடுந்தீவு மக்களின் கவலையினை சொல்ல முடியாது. பிரிவு யாரை விட்டது. துயர் ஆறித்தான் தீரவேண்டும்.

சாவே உனக்கொரு நாள்
    சாவு வந்து சேராதா?
சஞ்சலமே நீயுமொரு
    சஞ்சலத்தைக் காணாயோ?
தீயே உனக்கொரு நாள்
    தீ மூட்டிப் பாரோமா?
தெய்வமே உன்னையும் நாம்
    தேம்பி அழ வையோமோ?

இத்தம்பதிகளிருவரும், நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனாய், பண்பிலே தெய்வமாய் வாழ்ந்தவர்கள். இவர்களின் இழப்பு எம் தீவக மக்களுக்கு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். இவர்களை இழந்து துயருறும் அனைவர்க்கும் எம் தீவக மக்களின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, இவர்களின் ஆன்மா சாந்தி அடைய இறை அருளைப் பிரார்த்திக்கின்றோம்.

- **கலாபூஷணம் புலவர் அரியநாயகம் ஜே. பி.**
முன்னாள் பிரதேச சபைத் தலைவர்
தலைவர். பல நோ. கூ. சங்கம் நெடுந்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tribute to A Wonderful Couple

It was 66 years ago when I accidentally lost my two main milk teeth in front of their house at Delft East while playing with Vettivel (Maruthu was too young to participate) and some other boys. The scream and the blood were stopped and nursed by Ponnammah Mami who was not married then but had the responsibility of bringing up two young boys in the 'form' of Vettivel and Maruthu for whom Periyakka (elder sister) was the mother.

I believe Mr Kumarasamy has started courting Periyakka in 1948 or thereabout and they got married soon after and I was aware of the birth of all the children.

What is sticking out in my memory is the way Mr Kumarasamy had built up his business in Delft. He displayed extraordinary ingenuity to become so successful in what seemed an impossible task of building a business in Imports & Exports in Delft where facilities of any kind were non-existent.

In my opinion Messrs Alistair Darling & George Osborne could have learned a thing or two about Business and Finance along with the preparation of Annual Budgets for the country from Mr Kumarasamy for whom I have great admiration and respect . Of course, he would not have been so successful without the power house behind him i.e. his wife. Her constant support, advice and admiration were unconditional. While being shrewd in business, he had never deviated from ethics and morality; the unshakeable qualities that they both possessed and maintained right up to the last minute .
A model couple from whom a lot of lessons could be learnt by many couples as how to harmonise a family life.

Fate cannot be altered however. Both of them are sorely missed by all of us.

- *V Rasalingam*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுதற்கோ முடியாது

எங்கள் உடன்பிறப்பே உயிரே
பாசமெனும் சொல்லுக்கு
பாங்காக வாழ்ந்தவனே
தந்தையை இழந்த துயர்
அறியாது எமைக் காத்தாய்
கடமைகள் பல செய்து
கண்ணியமாய் வாழவைத்தாய்
வாழ்வு சிறப்புற நல்
வாழ்க்கைத் துணை தேடித்தந்தாய்
உடன் பிறப்பே எம் உயிரே
உன் கரம் பிடித்த உத்தமியோ
அன்னையைப்போல் அரவணைத்தாள்
பாச மழைபொழிந்து
பண்புடனே வாழவைத்தாள்
அன்றில் பறவைகள்போல்
அன்பாக வாழ்ந்தீர்கள்
காலனவன் உன் கரம்பிடித்தழைக்க
காரிகையும் உன்னுடனே கடுகி வந்தாளே
இருவரையும் இழந்துநாம்
இருட்சிறையில் வாடுகிறோம்
ஆறாத துயரமது ஆறுதற்கோ முடியாது
காலங்கள் உள்ளவரை
கலங்கிடுவோம் உமை நினைந்து!

**சகோதரிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரின் வாசனை

யாழ்ப்பாணத்து தீவகங்களுள்ளே அதன் புவியியல் அமைப்பில் ஒரு பேரியற்கைப் பிரதேசமாக விளங்குவது நெடுந்தீவு.

இந்த புவியியல் தன்மையும், அந்தத் தீவு அமைந்த கேந்திரமும் அந்த ஊர் மக்களின் வாழ்வில் - பண்பாட்டில், அந்த பண்பாட்டுக் கூறுகளில் ஒரு தனித்துவத்தை மிளிரவைக்கின்றன.

ஆழ்கடல் மத்தியில், சற்று அதி தொலைவில் அந்நியமாக இருந்ததில், அந்த மக்களிடையே மற்றையவர்களுக்கு உதவும் மனித நேயம் மிகுந்திருந்தது.

வரட்சியிலும் வளத்தைக் காணும் உழைப்பு இருந்தது.

ஒழுக்கமான வாழ்வு இருந்தது.

கலப்பில்லாத பண்பாட்டுத் தூய்மை இருந்தது.

இயற்கையை வெல்வதில் வீரம் இருந்தது.

மொழி வழக்கில் - மத பழக்கவழக்கங்களில் திரிபில்லாத செழுமை இருந்தது.

ஆக, இப்படி தனித்த ஒரு மண்வாசனையை அந்த ஊர் கொண்டிருந்தபோது, அந்த மணவாசனையை அசலாக வெளிப்படுத்திய ஒருவராக அமரர் குமாரசாமி அவர்களைச் சொல்லலாம்.

சுற்றம் பேணும் பண்பில்; கடினமான உழைப்பில்; வீரத்தில்; வாக்குத் திறனில்; குதர்க்கத்தில்; சாதுரியத்தில் 'நெடுந்தீவான்' என்ற அடையாளத்தை துல்லியமாய்ச் சாற்றியவர்.

அவரின் துணைவியாரும் அவ்வாறே இத்தகைய பண்புகளில் நிறைந்தவர்.

இவையெல்லாவற்றுடனும், இவர்கள் இருவரும் எனது நெருங்கிய உறவுக்காரர்கள்.

அவர்கள் இருவரதும் ஆத்மாக்கள் சாந்திபெறுவதாக.

**- சு. மகாலிங்கசிவம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிலைப்பவர்கள்

அமரர்களான திரு சுப்பிரமணியம் குமாரசாமி, திருமதி பொன்னம்மா குமாரசாமி ஆகிய இருவரும் எமது நெருங்கிய உறவினர்கள். திரு குமாரசுவாமி அவர்கள், முயற்சியுடையோர் இகழ்ச்சி அடையார் என்பதற்கமைவாக எந் நேரமும் முயற்சியுடன் பாடுபடுபவர் 'திரைகடலோடித் திரவியம் தேடு' என்ற பொன்மொழிக்கொப்ப நெடுந்தீவில் இருந்து கொண்டு இரு படகுகளை கட்டி, அவற்றின் மூலம் உள்ளூர் உற்பத்தி பொருட்களை வெளியிடங்களுட்கு ஏற்றுமதி செய்து, வெளியூரில் இருந்து பொருட்களை ஊருக்கு கொண்டு வந்து சேவை செய்ததுமட்டுமல்லாது மக்களின் போக்குவரத்துக்கும் பெரும் சேவையாற்றிய காலப்பகுதியை யாராலும் மறக்கமுடியாது.

தனது பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பி வசதிபடைத்த நிலையில் நெடுந்தீவில் வாழ்ந்த போதிலும்கூட தனது முயற்சியைக் கைவிடாது 'செய்யும் தொழிலே தெய்வம்' என்பதற்கமைய முயற்சியுடனேயே செயற்பட்டவர். உறவினர்களையும் ஏனையோரையும் இன்முகத்துடன் வரவேற்று அனுசரிக்கும் பண்பு கொண்டவர்.

தான் பிள்ளைகளுடன் வெளிநாட்டில் இருந்தபோதும் 'பெற்றதாயும் பிறந்த பொன் நாடும் நற்றவ வானில் நனி சிறந்தனவே'என்பதற்கொப்ப கோவில் திருவிழாக்கள் மற்றும் விசேட நாட்களில் ஊருக்கு வந்துவிடுவார். இம்முறை ஊருக்கு வரும்போது சிறிது நோய் வாய்ப்பட்டிருந்தாலும், அத்தனை உறவினர்களையும் கண்டு சந்தோசமாக 'மீண்டும் மேலுக்குச்சந்திப்போம்'என்று கூறிச் சென்றதை நினைக்கும் போது கவலையாக உள்ளது. தான் இறைவனடி சேரப்போவதை சூட்சுமமாக எல்லோருக்கும் கூறிச்சென்றுள்ளார்.

திருமதி பொன்னம்மா மாமி அவர்களை எழுத்துக்களால் வர்ணிக்க முடியாது. அவவுக்கு நிகர் அவரேதான். ஏனென்றால், வீட்டுக்குச் செல்லும் யாராக இருந்தாலும் உணவருந்திவிட்டுத்தான் வெளியே போகவேண்டும். உற்றார் உறவினருடன் உரிமையும் உறவும் பாராட்டி, நன்மை தீமைகளில் கலந்து கொண்டு அன்புடனும் பண்புடனும் பழகும் ஓர் உள்ளம். அத்துடன் சமயப்பற்றும் கொண்டவர். சமயகுரவரான சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபுசை செய்யவேண்டும் என்பதற்காக நாயனாரின் சிலை செய்து பெருக்கடி ஆலயத்தில் வைத்துள்ளார். எனது தந்தையார் விசேட தினங்களில் பொன்னம்மா அக்காவிடம் சென்றுதான் வேறு இடங்களுக்கு செல்வார். இவர்கள் இருவரினதும் இழப்பு பிள்ளைகட்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். 'பிறப்புண்டேல் இறப்பு என்பது நிச்சயம்' என்பதற்கமைய இறைவனை பிரார்த்தித்து சாந்தியடைய வேண்டியதுதான் ஒரேவழி. இருவரும் ஒற்றுமையான கணவன், மனைவி என்பதை ஒருவருடத்துக்குள்ளே இருவரும் இறைவனடி சேர்ந்தது எடுத்துக்காட்டுகின்றது.

இவர்கள் இருவரினதும் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம். ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

- **திருமதி சாரதாதேவி கிருஷ்ணதாஸ்**

அதிபர், மகாவித்தியாலயம், நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் சேவையும்

செழுமையுடன் சீர் பொலிந்த நாடு.
பெருமைமிகு சிறப்புடன் திகழ்ந்த நாடு.
ஆன்றோர்கள் வல்லோர்கள் வாழ்ந்த நாடு.
அடிமையாய் என்றுமே வாழா நாடு.
கற்றோர்க்கு ஏற்றம் வகுத்த நாடு.
தமிழினத்தின் பண்புகளை விதைத்த நாடு.
பொன்னாடே, நம் நாடாம் நெடுந்தீவு.

நெடுந்தீவின் மேற்கையும் கிழக்கையும் வாழ்விடங்களாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்டு, சீரோடும் சிறப்போடும் வையகம் போற்ற குடும்பம், சகோதரர்கள், சுற்றம் பேணி வாழ்ந்த பெரியையா, பெரியம்மாவின் கனிந்த உள்ளமும், சிரித்த முகமும், அன்பின் உபசரிப்பும் யாராலும் நிரப்பமுடியாது.

'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்'. அன்புக்கும் பாசத்துக்கும் இலக்கணமாக திகழ்ந்தவர்கள் இவர்கள்.

ஊருக்கும் மக்களுக்கும் தொண்டுகள் பல ஆற்றி, தங்களாலான பணிகளைச் செவ்வனே செய்து, குடும்பச் சுமைகளையும் தாங்கி, 'மக்கள் சேவை மகேசன் சேவை' என்பதற்கு அமைய, நெடுந்தீவு மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு வர்த்தகம், கடல், தரைவழி போக்குவரத்து என்பவற்றில் அல்லும் பகலும் தன்னலம் கருதாது உழைத்து, சமுதாயப் பணிகளில் முக்கிய பங்களிப்பைச் செய்தார்கள்.

அணிகலன் என்னும் நன் மக்களைப் பெற்றெடுத்து பண்புடன் வளர்த்து, அவர்கள் தமது சாதுரியத்தினால் மேலும் உயர்ந்த வாழ்க்கையை அடைந்த மகிழ்ச்சியான வேளையில் இறைவனும் மனம் பொறுக்காது அழைத்துவிட்ட செய்தி எல்லோர் மனங்களையும் இறுக்கிக்கொண்டது.

எமது பெரியையாவினதும் பெரியம்மாவினதும் ஆத்மா சாந்தியடையவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**– அ. கோசலா**
**பெறாமகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதில் உறுதி

கடலன்னை தாலாட்டி
கவிபாடி விளையாடும்
ஆவினம் அழகாக
அம்மா என்று இசை பாடும்
தென்னை பனைதனை
தென்றல் வந்து தாலாட்டும்
ஆலமரம் அரசமரம்
அழகாக அசைந்தாடும்
கோவில் மணிஓசை
கோலமிட்டு ஒளியேற்றும்
நெடுந்தீவு எனும் ஊராம்
நெசத்தில் நிறை ஊராம்

நெடுந்தீவுதனில் நீண்ட காலமதாய்
வணிகராய் வாழ்ந்த
சுப்பிரமணியம் குமாரசாமி
ஆற்றல் மிகுந்த எங்கள்
அன்புடைய மாமா
தாயாரின் உடன்பிறப்பு
தந்தை போன்ற அரவணைப்பு
உயர்வான சிந்தனைகள்
ஊக்கப்படுத்திடும் எம்ஆசான்
புன்சிரிப்பால் கதை சொல்லும்
பூ மகனார் எம்மாமா

அன்னவரின் துணைவியான
பொன்னம்மா எம்மாமி
கணவன் கண்பார்த்து
காரியம் செய்யும் குணவதி
மாமாவின் பிரிவால்
மனம்நொந்து மாமி
கணவனுடன் இறைசென்ற
கற்புடைய மாதரசி

நல்லறங்கள் பலசெய்து
நல்லவராய் வாழ்ந்தவர்கள்
அழகான புன்சிரிப்பால்
அனைவரையும் கவர்ந்திடுவர்
உடன்பிறந்தோர் வாழ்வுக்காய்
உழைத்த நல்உத்தமர்கள்
இன்று தெய்வங்களாய் வாழ்கின்ற
எம் மாமா மாமியினை
ஒருகணம் மனதில்நிறுத்தி
வாழ்வில் என்றும் சோதனை வென்று
சாதனையாளராய் வாழ உறுதி
கொள்வோம்.

'அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை பண்பும் பயனும்அது'
வள்ளுவனும் வாசுகியும் போல்
வாழ்ந்த மாமா, மாமி
தாள்பற்றி நாம் வாழ
கரம்கூப்பி தொழுதிடுவோம்
அன்னவரின் ஆத்மசாந்திக்காய்
பக்தியுடன் கரம்குவிப்போம்

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

**அன்புடன்**
**மருமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் கண்ட தெய்வங்கள்

கணபதியை கந்தனைப் பெற்ற ஆதிசிவனையோ
பார்வதியையோ நாம் கண்டதில்லை.
நாம் கண்ட தெய்வங்கள் எம் அப்பாவைப் பெற்ற
அப்பப்பா, அம்மம்மாதான்.

அப்பப்பா யாரைக் கண்டாலும் சிரிப்பார்.
யார் எதைக் கேட்டாலும் சிரிப்பார்.
அந்தச் சிரிப்பில் அதன் பதில் இருக்கும்.

அன்பாய் எமை அழைத்து பண்பாய் கதை சொல்வார்.
பாக்கு நீரிணையில் படுத்துறங்கிய
நெடுந்தீவைத் தட்டி எழுப்பி
பசுந்தீவு, பசுத்தீவு, பால்தீவு
ஆக்கியது தன் பரம்பரைதான் என்பார்.

தானும் தன் காலத்தில் தன்னால் இயன்றவரை
தன் ஊரை எல்லா வளங்களிலும் உயர்த்திவைத்த கதை சொன்னார்.

இனி வரும் காலம் உங்கள் கைகளில் என்றும் சொன்னார்.
பேரப் பிள்ளைகள் பரம்பரைக் கௌரவம்,
ஊரின் பெருமை காப்பது கடமை என்றார்.

தெய்வத்தின் கட்டளைகளை நிறைவேற்ற
தெய்வங்களை வணங்கி நிற்கும்

**- பேரப்பிள்ளைகள்**
**மணாளினி, மயூரன்,**
**நிரோஷன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# To Appappa and Appamma

It's been a year since you left us and we miss you greatly.

We wanted you to know that we still look upon you both with great admiration and love.

You lived a long and fruitful life and set a great example on how to live life for all your grandkids. The kindness and respect you showed your friends and family will never be forgotten.

Appamma's quiet nature and wisdom combined with Appappa's strength and courage formed a great partnership, which survived so many years. We want you both to know that we could not be more proud of being a part of your lives and we hope that we can make you proud in the future.

All we have left of you is the wonderful memories that we shared over you. Your legacy will continue in the wonderfully vibrant family that you both created and nurtured.

From your loving grandchildren,
- **Manaliny & Navenen, Mayuran & Niroshan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## We Keep Forever

Ripe sunrays swell the chestnut, in spiny green, cocooned.
Soon the succulent flesh will be grilled and consumed.
Birth, growth, death, eternally cyclical. Inescapable.
Her hands so soft, yet lined by experience now invisible,
Caress my cheek, with tender love and awe.

A child of her autumn, stubborn as her mirror, yet
Cherished beyond doubt, fed on dreamy tales of might.
Concentric circles, slowly indisputably spread far.
Yet revolve evermore like unruly planets around the star.
The depth of her eyes tells stories of long ago.

Leaves have long gone, bark resplends in the cold light.
Unruly snowy softness of her hair, tied in a bun, tight.
She sits revisiting autumn days of glorious colours,
When child and woman filled airy castles full of treasures.
Her voice sings lullabies, aged and mellow.

Ice cold rays highlight imperfections of withered Nature.
None can escape the perfect circle of life forever.
Each second, a bullet piercing her bounteous heart, bleeds.
Slowly numb dreams to come. She shan't hold my seedlings.
Her fragrance surrounds me like a halo.

Slowly time takes all that Nature generously gives.
Ticking slowly but unstoppably, it tells of non-stories.
Flowing ceremonious robes with pomp and circumstance,
Her withered happy eyes shall not glance or praise.
Her embraces calm my reckless nature.

In winter, Nature wishes back, all that she gives.
Ashes to ashes, the soil shall absorb the bonfire leaves.
She won't see my crimson regalia, nor tease shyness away.
Her witty repartees will no more, adversity in my path, slay.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Awashed with tears, the loss we endure.
Constant as the North Star, never faltering,
Ayya guided us all on our voyage of discovery.
Relied on by Family and friends alike.
He stood strong, a pillar of love and light.

Wreathed with a smile and twinkling eyes,
Walked tall amongst old and young alike,
Laughter never left his horizon,
Neither did the cigar and swagger.

Humble and faithful, with a dash of showmanship,
Ayya steered the helm, supported by Ammamma.
Wisdom gleaned from days of strife and toil,
He served as hidden pearls to us all.

Dreams he nurtured with care, applauded merit,
Gently rebuked nonsensical vagaries,
Despite many seas and years dividing us,
Love and support he showered on all around.

Never far from one another, Ayya and Ammamma,
Together, as One they lived and traversed,
A revelation of marital harmony, time tested,
Bountiful, fair, kind continued your saga.

Shock, awe and despair afflicted us,
As you left these shores for worthier ones.
Inevitably filled with remorse and dysphoria,
A happy part of you we keep forever locked in us.

- ***Rajini, Raj and Jen Varadarajah***
Grandchildren



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Never be forgotten

Ammama and Thata were truly the heart and soul of my whole family. They were full of life and a day never went past with them voluntarily having a rest. Ammama and Thata treated everyone as their own and made sure they did whatever they could for them. No task was too big and no problem was unsolvable for them. Thata always used to say that you shouldn't judge anyone, everyone had their problems.

கூழுக்கு உப்பில்லை என்றாலும் கவலை; பாலுக்கு சர்க்கரை இல்லை என்றாலும் கவலை

Ammamma was a saver by nature, and she liked to remind us that every penny counts.

சிறுதுளி பெரு வெள்ளம்

Every time we visited the grandparents, they always had many stories to share. Thata always exaggerated and changed them a little each time. However, Ammama was always there to correct him. They always wanted to share their memories with us. What really made me laugh on our visits, was that they were always nagging at each other and complaining to Amma, like she was their parent. However, from their constant friendly bickering you could tell that they had a lot of love for each other.

I always found that Ammama and Thata had an air about them, that they were people that could achieve anything they wanted and chose to live the life they did. They always made sure that we, their grandchildren, had more choices and opportunities to be whatever we truly wanted to be in life, and for that I am wholeheartedly grateful that they are MY grandparents. It was Thata that brought Acca's first stethoscope and he was the proudest person on her graduation day.

Ammama and Thata, I love you and miss you both very much. I promise that I will make you both very proud of me and make something good out of my life. Both of you will NEVER be forgotten and will always be in both my heart and my every thought.

- ***Rajenthini Varadarajah***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Grandparents and I

Has it really been a year? The house feels almost empty. It is amazing how quickly our lifestyles adapted to the unexpected change but there are oh so many moments when the loss catches up and bowls you over.

My Appamma was a very traditional woman. So traditional that her views may be considered to be antiquated by those who are not aware of her roots. However, it is in our interest to learn from her traditions and adapt them to our current lifestyle. She was known for her kind hospitality in Neduntheevu where she looked after not only her own guests but also the patients of the Apothecary next door. This continued at our house in London, where she insisted that all our guests ate before they left. The Thirukkural has a chapter on 'virunthombal' or 'hospitality' that suits Appamma very much. It explains how good hospitality, particularly feeding those in hunger, is equivalent to inviting the Goddess Lakshmi into your house and that goodness and prosperity will come to you. The Kural that comes to mind at this moment however is the following:

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானத்தவர்க்கு Kural 87, Chapter 1.2.5

*He who entertains his guests very well and awaits for yet others to come as his guests, will be welcome guests to the inhabitants of heaven.*

My father has the utmost respect for his mother, evident in the many stories he brought me up on about the family background and history. But more than him, the respect is obvious in the many Neduntheevu folk that came to our house over the past ten years to make sure they spent time talking to Appamma whilst they had the opportunity. I was grateful that I could learn so much more about my roots and get to know so many more people who would have otherwise been complete strangers to me.

This time last year, I was in Cambridge checking my phone during breaks praying that there would never be a missed call or message from a family member. The only reason I could think that any of them would have called, particularly during my working hours, would have been to deliver bad news as Appamma was extremely weak and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

had been admitted into hospital as soon as she realised Appappa wasn't coming back. It was very difficult to see Appamma looking 'bare' (as she would have referred to it) without her jewellery and kunguma pottu that in a way I was relieved that she left the earth to be reunited with Appappa in another dimension.

Though Appamma's passing was something we were prepared for, Appappa's was a complete shock to us all. Part of me still thinks that he is in the room next door. Certain sounds and smells definitely make it feel so real.

I have many fond memories of my visits to Sri Lanka as a child. The more fun moments stem from the stories and jokes Appappa told to keep me entertained. My most favourite one was when we were in a hotel in Colombo and I asked if he could read me something from an English newspaper. He said that he would have done but unfortunately he left his English reading glasses in Neduntheevu and the ones in his pocket only helped him read Tamil. Though he said it with what I later realised was his trademark cheeky smile, I totally fell for it at the time and thought it was so cool that such glasses existed and that he owned them.

When my grandparents moved to London and lived with us, my relationship with Appappa changed. I think this was due to a combination of me being a teenager and our differences in opinions. However, once I started university, I began to change my ways and become much more tolerant and patient. I realised that the only way to survive living in the same house was to meet him halfway and understand that to live well you need a good mixture of both our approaches to life.

Appappa was extremely well read, always quoting Literature to us. He was also a keen gardener. He religiously maintained a vegetable patch in our garden and we were guaranteed at least a few green chillies and tomatoes for our daily cooking. There is no denying that my Father and each one of my Aunts and Uncles have definitely inherited their Father's traits. They are all extremely hard-working, not in the least bit lazy and are very thorough and systematic in their work. These qualities definitely stand testament to him. Appappa often took a protective patriarchal role with his own siblings and those of Appamma. Something I learnt from him was to always show a united front.

Appappa was quite an influential person in Neduntheevu, known for his business acumen. Appappa left us in the late afternoon on that Monday in July and within five or so hours, the Emergency Medical Unit at Whipps Cross Hospital was swamped with over 200 family members and close friends. That itself goes to show the impact he and the rest of his family had on the community.

Appappa said on many occasions that he wanted to live with me till his last days. I wasn't sure why he wanted to but I'm glad that he did and that we had a good number of years of peace. I never really apologised for anything I may have said to cause him



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

hurt but I know he is looking over us and protecting our family now for which I am grateful.

On behalf of my family, I want to take this opportunity to thank each and every one of you for giving us your condolences, time and emotional support during the months when we were overwhelmed and unsure of how to move forward. We may not have acknowledged it then but we are grateful. Thank you.

*Thulasi Mageswaran*

**Grand-daughter**

# கண்ணீருடன் துயருறும்...

தீவுகளின் பெருந்தீவாம் நெடுந்தீவு எம்தீவு
அத்தீவின் சிகரமாய் வாழ்ந்தவர் எம் அப்பப்பா!
நினைவோடு போனவையும் நின்றுகாணும்
வேரோடு சொந்தங்கள் பின்னால் வரும்,
புகழோடு வரவுகள் புதிது சேரும்
கைகளிலே வேல்உருவம் கொண்டவர் எங்கள் அப்பம்மா
எம்எல்லோர்க்கும் ஆசானாய் திகழ்ந்தவர்
ஏழு பிள்ளைகள் பெற்றெடுத்த எங்கள் அப்பப்பா - அம்மம்மா
பதினேழு பேரப்பிள்ளைகளும் கண்டவர்கள்
எம் ஒளிமயமான வாழ்வுக்கும் ஒளி விளக்காய் இருந்தவர்கள்
நீங்கள் இன்றி கண்ணீருடன் துயருறும்

- பேரப் பிள்ளைகள்: சசிகஜன், அபிரா, மயூரா, மதிரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Grandparents

My grandparents were kind hearted;
their kindness lives in our hearts.
I feel their loss.

We all mourn your absence.

And will cherish all the wonderful memories.
We never got the chance,
To thank you for all you did for us.
You always said to work hard and do well in life;
It will always be replaying in my ear.
Nothing feels the same without your presence.
We will yearn for your loss deep inside, and
Put on a brave face and face the world.

Your love of life, educated me.
Your passion for life, gave us hope.
The lives you lived will never be forgotten,
your memories are engraved deep inside our hearts.
Your memories will live with us, forever.
It was god's will to take you both away;
I feel the emptiness, as we all do.
As a huge void in our hearts.

There will be things I miss, but
We will remember your strong will, to get through it all.

Thatha and amamah, you will never be forgotten!

*- Barany, Partheeban, Pragalathan and Kasturi Sothirajah*
Grandchildren



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Appamma & Appappa
# – Keep loving and guiding us all!

‘You can shed tears that they have gone,
Or you can smile because they lived,
You can close your eyes and pray that they will come back,
Or you can open your eyes and see all that they have left.
Your heart can be empty because you can't see them
Or you can be full of the love that you shared,
You can turn your back on tomorrow and live yesterday,
Or you can be happy for tomorrow because of yesterday.
You can remember them and only that they are gone
Or you can cherish their memory and let it live on,
You can cry and close your mind be empty and
turn your back,
Or you can do what they would want:
smile, open your eyes, love and go on.’

- *Luxsana, Lakshman and Harrish Mathiyalagan*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயம் மிக்க மா மனிதர்

பசுமை, வளமிக்க பசுந்தீவாம் நெடுந்தீவு கிழக்கில் புகழ் பெற்ற இராமநாதர் உடையாரின் பூட்டன் திரு மருதையனார் சுப்பிரமணியம் குமாரசாமி அவர்கள் ஒரு மனித நேயம் மிக்க மாமனிதர்.

சிரித்த முகம், சிவந்த மேனி, உயர்ந்த தோற்றம் உயரிய உள்ளம், நிமிர்ந்த வீறு நடை, வெண்ணிற உடை, சைக்கிள் சவாரி என்பன அவரது அடையாளச் சின்னங்களாகும்.

அன்னார் அனைவரிடமும் அன்பாகப்பழகி, கவரும் தன்மையுடையவர். அவர் ஆற்றிய சேவைகள் யாவும் எம்மூர் மக்கள் மனதில் நீங்காத நினைவாக நிலைத்து நிற்கின்றன.

இவர் ஒரு சிறந்த வர்த்தகக் கனவான். ஊரில் தனது குமரன்ஸ் வர்த்தக நிலையம் மூலம் தரமான பொருட்களை நியாய விலையில் மக்களுக்கு வழங்கி மக்கள் மனதில் இடம் பிடித்தவர். வெறும் சுய விளம்பரத்திற்காக பலர் அலையும் இக்காலகட்டத்தில் தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் பெருநோக்கோடு அவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியது, அவற்றை வாழ்த்தாமல் இருக்க முடியாது.

ஓர் ஊரின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத காரணங்களில் முக்கியமானது போக்குவரத்து வசதி. யாழ்ப்பாணத்தில் இருந்தும் நெடுந்தீவிலிருந்தும் காலையில் பயணிப்பவர்கள் தத்தம் அலுவல்களை முடித்துக்கொண்டு மாலையில் வீடு திரும்ப வசதியாக தனது படகையும் லொறியையும் தம்மூர் மக்களுக்காக உதவிய பெருமகன். அத்துடன் தனது உழவு இயந்திரத்தையும் தம் ஊர் மக்களுக்காக போக்குவரத்து செய்வதற்கும் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கும் உதவிய பெருந்தகையாளன்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந்தனவே" என்பதற்கிணங்க

தான் பிறந்த ஊக்குப் பல வகைகளிலும் அளப்பரிய சேவை செய்து வளம் சேர்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனின் வெற்றிக்கு உயர்வுக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பார் என்பது ஆன்றோர் வாக்கு. அதற்கமைய அவரது துணைவியார் பொன்னம்மா பொன் - அம்மா ஆகவே திகழ்ந்தார்.

"செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத்தவர்க்கு"

என்னும் வள்ளுவனின் வாக்கிக்கிணங்க மனைத்தக்க மாண்புடையவளாகி, குழந்தை தொடக்கம் முதியோர்கள் வரை இனிமையாகப்பேசி இன்முகம் காட்டி, விருந்தோம்பும் பண்பாளர். உற்றார் உறவினர் அனைவரையும் கரம் கோர்த்து பலம் சேர்த்து வாழ்ந்தவர்.

பண்பால், குணத்தால் கல்வியால், தரணி பாற்றிடும் புதல்வர், புதல்விகளைப்பெற்று, இனிய பேரன் பேத்திகள் பலரைக்கண்டு தாரகை போற்ற தரணியில் வாழ்ந்தவர். இவர் புகழ் பாட நாம். ஏது இகத்தினில்!

அமரர்கள் குமாரசாமி பொன்னம்மா புகழ்பாட இயம்பிடுவீர். புகழ்பாடும் நெடுந்தீவே

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**சகோதரி மைத்துனி**
**யோகம், நரேந்திரன்**
**(யோகம் ரீச்சர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓம் சக்தி

2010ம் ஆண்டு கார்த்திகை மாத நடுப்பகுதியில் பாசமிகு தாய் ஒருவரை லண்டன் வைத்தியசாலை ஒன்றில் சந்திக்கும் பெரும் பாக்கியம் பெற்றேன்.

அத்தாயாரின் இறுதி மூச்சிற்கான நேரம் அது தன்னைச் சுற்றி எது நடக்கின்றது என்பதையோ தான் எங்கு இருக்கின்றேன் என்பதையோ முற்றாக உணர முடியாது. அவரது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் உறவினர்களும் வந்துவிட்டால் எப்படி எழுந்து அவர்களுடன் பேச முடியும், கட்டி அணைத்துக் கொள்ள முடியும் என்ற ஏக்கமே அத்தாயாரின் கண்ணிலும் கவனத்திலும் நிறைந்து இருந்த தாய்மை உணர்வு பார்ப்பவர்களையும் கண்ணீர் கசிய வைத்தது.

ஆன்மாவை சுமந்த உடல் முதுமை நிலை அடைந்து இயற்கை மரணம் அடையும் வேளையில் சுகந்தமான நறுமணம் வீசும் என்பதை பல நூல்களில் கற்று இருக்கின்றோம். அதனை நேரில் காணும் பாக்கியம் கிடைக்கப் பெறுவது மகா புண்ணியமே. முதுமை அடையும் ஒவ்வொருஉடலிலும் எவ்வளவு மானுட சக்தி தொகுக்கப்பட்டு இருந்தது, என்பதனை அவரின் உடலினை தொட்டு Massage செய்யும்போது உணர்வு பூர்வமாக உணரமுடிந்தது. அவர்களின் வாழ்க்கை முறை உணவு முறை, ஒழுக்க முறை என்பன உடலில் தூய சக்தியை சேமித்து வைப்பதற்கு மூலமாகிறது. அவரிடத்தில் பாசமிகு தாய்மை உணர்வு சிறுவயது முதல் இருந்ததாகவும் அவரின் சகோதரர்களை சிறிய வயதில் இருந்து பேணி வளர்த்ததாகவும் பின்னர் அறிந்து கொள்ள முடிந்தது.

சகோதரர்களை தனது பிள்ளைகளிற்கும் மேலாகப் போற்றி வளர்த்ததாக அன்னாரின் சகோதரர்கள் கதறி அழுதார்கள். அவருக்கு "தாயிலார்" எனும் ஒரு பெயர் இருக்கிறதாம்.

தாயுமானவர் என்ற பெயர் சிவனுக்கு பாசமிகுதியால் அமைந்ததுபோல் இவருக்கும் இப்பெயர் தானாக அமைந்தது போற்றுதலுக்குரிய சிறப்பே. இறுதி மூச்சின் போது பாசமிகு இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு அம்சமான இருவரின் திருவுருப் படங்களை வலது தோளிலும், இடது தோளிலும் சுமந்தபடி இறுதி மூச்சினைத் துறந்தார்.

இரண்டு குருமாரும் அன்னையின் உருவமான அருட்திரு பங்காரு அடிகளாரும் முருகக் கடவுளின் அவதாரமான அருட்திரு சரவணபாவா சுவாமியும் ஆவார்கள். இதுவே அன்னாரின் பாசமிகு சேவைக்கு கிடைத்த பாராட்டுதலுக்காக என்மனம் பூரித்துப்போனது.

இப்படிப்பட்ட பெண்மையும் தாய்மையும் பூசித்தலுக்கு உரியவர்களே.

ஓம் சக்தி

குருவடி சரணம் திருவடி சரணம்

**சக்தி,**
**உதயா விஜயன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பில் உயர்ந்தவர்



## திரு ம. சு. குமாரசாமி அவர்கள்

தோற்றம்: 06.04.1926 மறைவு: 19.07.2010

பல்வேறு துறைகளிலும் ஆற்றல்மிக்க பல பெரியோர்களை எமது தீவகம் பெற்றெடுத்திருக்கிறது. அந்தவகையில், வியாபாரத்துறையில் சிறந்து விளங்கியவர்களில் அமரர் ம. சு. குமாரசாமி அவர்கள் முன்னிலைபெற்று திகழ்ந்தவர்.

மிகக் கடின உழைப்பாளியான இவர், அன்றைய காலங்களில் தீவகத்தின் வளங்களைப் பேணி, அதனூடாக வருமானம் ஈட்டும் தொழில்நுட்பத்தை உருவாக்கி, நெடுந்தீவின் தொழில், பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்.

ஆழ்கடல் சூழ்ந்த எம் தீவகத்தின் போக்குவரத்துக்கு இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அத்தியாவசிய பொருள்களை அத் தீவுக்கும், அங்கு உற்பத்தியாகிய பொருள்களை நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பி, எமது மக்களின் தேவைகளை நிறைவேற்றிவந்தவர்.

தனது முதுமைக் காலத்திலும் மிகவும் சுறுசுறுப்புடன் பணியாற்றிவந்த இவரின் இழப்பு, எமது மண்ணுக்கு ஏற்பட்ட இழப்பாகவே கருதப்படக்கூடிய ஒன்றாகும்.

எமது ஒன்றியத்தின் வளர்ச்சிக்கு இவரும் இவரது குடும்பத்தினரும் ஆற்றிய - ஆற்றிவருகின்ற சேவைகள் அளப்பரியவை.

அன்னாரது மறைவால் துயருறும் அனைத்து உள்ளங்களோடு, எமது ஒன்றியமும் இணைந்து கொள்கிறது.

அவரது ஆத்மா சாந்தி அடைக!

25.07.2010

நெடுந்தீவு ஒன்றியம்
ஐக்கிய இராச்சியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்அஞ்சலி

***திரு. சுப்பிரமணியம். குமாரசாமி***

*பிறப்போடு நெடுந்தீவு, இலங்கை! பிரிவோடு லண்டன், பிரித்தானியா!.*

***06.04.1926 19.07.2010***

*துள்ளித் திரியும் இளமை வயது சென்றும்!*
*வெள்ளை மனமும், விசனமற்ற பேச்சும் இயல்புமொழி!*
*அள்ளற் கரிய உயர் கள்ளமற்ற பிள்ளையுள்ளம்!*
*எள்ளளவும் அஞ்சா இயல்பும் நிறைந்தவனே!*

*அரசியல்!*
*நம் ஊர் அரசியலும் முழு நாட்டை நினைவுறுத்தும்!*
*எம் ஊர் கணபதியருக்கு இணக்கமுள்ள மகனாய்*
*தம் ஊர் உயரவென்று தந்த பல சேவை கண்டோம்!*
*உம் ஊர் உயருமையா ஒரு பொழுதும் வீழாது!*

*ஐயா!, உங்கள் செல்வங்கள்!*
*பெரியவர்க்கும் பெரியவராய் பெற்றவர்கள் நாடெல்லாம்!*
*அரிய பல தொண்டும் ஆசி நிறை வாழ்வும் கண்டு!*
*உரிய முறை வாழ்கின்றார்! உங்கள் பெயர் நிலைப்பதற்கு!*
*சரிய வயதில்லை நம்மவர்க்கு சாரலுண்டு நூறுக்கப்பால்!*

*நியாயமற்ற துன் பிரிவு!*
*நிற்காது பலர் துயரம்! நீ கொடுத்து கொதித்த உலை!*
*வற்றாத வள நதியாய் ஊரவர்க்கு வாரி இறைத்த வள்ளல்!*
*தேற்ற ஏதும் கூறவொண்ணா தீமேல் விழுந்துவிட்டோம்!*
*ஆற்றுங்கள் அமர நட்பின் அனைத்து உறவுகளும்*

***நெஞ்சுறுதி செய்வோம் நெடுந்தீவும் சார்ந்தோரும்!***

*இவ்வண்ணம்*
*உளமுடைந்து அஞ்சலிக்கும் உங்கள் அமைப்பு!*
***ஐரோப்பா வாழ் நெடுந்தீவு மக்கள் அபிவிருத்தி ஒன்றியம். (DPDOE)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் உயர்திரு சுப்பிரமணியம் குமாரசாமி அவர்களின்

**ஆன்ம சாந்தி குறித்து அன்னாரின் இட்டதெய்வமாகிய வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகனைப் பரவுதல்**



விநாயகர் துதி

கற்பக விநாயகனே! கருணை மிகு சிற்பரனே!
நித்தமுமே நின்பாதம் நினைந்து பணிபுரியும்
ஒப்புயர்வில் செம்மல் ஓங்குநெடுந்தீவகத்தின்
திற்பரன் குமாரசாமி நின்கழல் சரணம்!

தென்கயிலை சிவனுக்கு ஆன்பால் நல்கும்
சீர்தமிழ் செந்தமிழோடு வேதஓசை
விண்பரம்பும் விழுமிய நற்பண்பு சாலும்
விங்குபுகழ் நெடுந்தீவின் உயர்குடியின்
அந்தமில்லா திறமையுடன் அன்பும் சொட்டும்
அரியசெம்மல் சுப்பிரமணியம் வாழ்வின்
செங்கதிரோன் ஒளிபரம்பும் தேசுமிக்க
திவ்யமைந்தன் திண்மைமிகு குமாரசாமி

பண்புமிகு குலப்பெருமை காக்க வேண்டி
பகர்குடியின் செம்மல் கந்தப்பு தந்த
அன்பினொடு அறிவுமுது தெளிவு மிக்காள்
அகலிகையோ அருந்ததியோ அறியோம் ஈடில்
இல்லறத்தின் துணையாக இணைந்த அம்மை
ஏற்றமிகு பொன்னம்மா கரங்கள் பற்றி
வல்லதிறன் தொழில் மகிமைமிகுந்து ஓங்கும்
வண்மைமிகு செல்வங்காள் எழுவராக!

சீர்மிகு நற்பண்பினோடு செல்வம் கல்வி
சிறந்தொளிர இலண்டன்நகர் பதியமர்ந்து
ஓதுமறை வள்ளுவமும் ஒருங்குசெப்பும்
ஒப்புயர்வில் இல்லறத்தின் சிகரமொப்ப
காலனுக்கும் பொறுக்கவொணா உயர்வு தானோ
காரணமோ யாம் அறியோம் அந்தோ! அந்தோ!!
சீலன் உயர் செம்மல் உயிர் கவர்ந்திட்டானோ!
செப்பவொணா இல்வாழ்வின் நியதி இஃதோ!

கற்பக விநாயக நின் கருணை எங்கே?
காசினியின் நியதி இஃதே அறியோம் நீயும்
பக்திமிகு நின்பாதம் பணிந்து போற்றும்
பார்புகழும் திடசித்தம் தெளிவு சொட்டும்
வித்தகமும் திண்மைமிகு செயல் திறனும்
மிட்டும் திறன்மிகு செம்மல் குமாரசாமி
ஒப்புயர்வில் நின்பாதம் இணைந்தான் திவ்ய
ஓங்கார தத்துவனே சரண் நினக்கே
ஓம்சாந்தி சாந்தி சாந்தி

எஸ். லோகராஜா மாஸ்டர்

அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திக்கும்
வோல்தம்ஸ்ரோ தமிழ் மக்கள் சார்பில்

**வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச் சங்கத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

**இராமநாத உடையார் - அமிர்தவல்லி (பிள்ளைகள்)**
சுப்பிரமணியம் - தங்கமுத்து
மருதையினார் (சின்னர்) - தையல்முத்து
நாகேந்திரர் (சின்னக்குட்டியர்) - பெரியதங்கச்சி

**மருதையினார் - தையல்முத்து (பிள்ளைகள்)**
சுப்பிரமணியம் - தங்கச்சிப்பிள்ளை
பொன்னம்மா - வேலுப்பிள்ளை
வள்ளியம்மை - கணவர்
வெள்ளைச்சி - கணவர்
இராமநாதர் - மனைவி
சேதுப்பிள்ளை - கணவர்
கணபதிப்பிள்ளை (கிராமசபைத் தலைவர்) - மனைவி

**பசுபதி இராமநாதர் (சிவலை இராம உடையார்)**
மகன் ஆறுமுகம் - சீதேவிப்பிள்ளை

**இராமநாதர் ஐயம்பெருமாள்**
**மகன் விசுவநாதர் (கறுவல் விதானை)**
மகள் சீதேவிப்பிள்ளை (சின்னப்பிட்டி)

**ஆறுமுகம் - சீதேவிப்பிள்ளை** (பிள்ளைகள்)
கதிரவேலு விதானை
சுப்பிரமணியம்
விசுவநாதர்
மீனாட்சி
**தையல்முத்து - மருதையினார்** (சின்னர்)
அன்னம்மா
நாகமுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுப்பிரமணியம் – தங்கச்சிப்பிள்ளை**
**(பிள்ளைகள்)**
பராசக்தி - சின்னத்தம்பி
தையலம்மா - பாலசிங்கம்
குமாரசாமி - பொன்னம்மா
பொன்னம்மா - சண்முகம்
கண்மணி - ஐயாத்துரை
கதிரவேலு - பொன்னம்மா
தனலக்ஷ்மி - சோமசுந்தரம்
தியாகராஜா - கண்மணி

**வைத்தியநாதர் உடையார் (மகள்)**
**பூவாத்தைப்பிள்ளை – நாகேந்திரம்**
**(பிள்ளைகள்)**
பெரியபிள்ளை - பெரியதம்பியார்
முருகேசு -
கார்த்திகேசு -
ஐயாக்குட்டி (வெள்ளையர்)
சின்னப்பிள்ளை - புலவுடையார்

**ஐயாக்குட்டி (வெள்ளையர்) பிள்ளைகள்**
கந்தையா
தம்பிப்பிள்ளை
தங்கச்சிப்பிள்ளை - சுப்பிரமணியம்
சுப்பிரமணியம்

**வைரவநாதர் (பிள்ளைகள்)**
பெரியதம்பியார் - பெரியபிள்ளை
சின்னத்தம்பியார்
இராமநாதர்

**பெரியதம்பியார் – பெரியபிள்ளை (நாகேந்திரம்-பூவாத்தைப்பிள்ளையின் மகள்) (பிள்ளைகள்)**
சிதம்பரம் - சடையர்
வைத்திலிங்கம் - சிவகாமிப்பிள்ளை
பெரியதங்கச்சி - நாகேந்திரர்
பாலர் மனைவி - பாலர்
கதிரவேலு - மனைவி
முருகேசு (வெற்றியார்) - நாகமுத்து
தையல்முத்து -
சுப்பிரமணியம் - மனைவி

**பெரியதங்கச்சி – நாகேந்திரர் (பிள்ளைகள்)**
மரகதமொழி - கந்தப்பு
குலசேகரம் - சீனிப்பிள்ளை
கறுத்ததம்பி - மனைவி
சுப்பிரமணியம் -
குட்டிப்பிள்ளை - சின்னக்கா

**கந்தப்ப முதலி**
மகன் தம்பிரான்
மகன் நல்லதம்பி
மகள் சிவகாமிப்பிள்ளை -

**கணபதிப்பிள்ளை** (மண்டி)
மகன் நாகப்பர் - சிவகாமிப்பிள்ளை

மகன் **கந்தப்பு – மரகதமொழி**
பொன்னம்மா - குமாரசாமி

**மரகதமொழி – கந்தப்பு (பிள்ளைகள்)**
நாகேந்திரம் - சத்தியபாமா
**பொன்னம்மா – குமாரசாமி**
பார்வதி - சபாபதிப்பிள்ளை
குமாரசாமி - விக்கினேஸ்வரி
சிவகாமிப்பிள்ளை - கனகசபை
நாகம்மா (புஷ்பம்) - சிவசம்பு
வெற்றிவேல் - பூவதிப்பிள்ளை
மருதையினார் - மேரி புஷ்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குமாரசாமி - பொன்னம்மா (பிள்ளைகள்)**
மகேஸ்வரன் - கிருஷ்ணவேணி
(மகள்)
கிரிஷாந்தி (துளசி)

நெடுஞ்செழியன் - நவமலர்
(பிள்ளைகள்)
மணாளினி - நவீனன்
மயூரன்
நிரோஷன்

கிருஷ்ணமூர்த்தி - பாமினி
(பிள்ளைகள்)
அபிரா - சசிகஜன்
மயூரா
மதிரா

(அமரர்) கோபாலகிருஷ்ணன்

இராஜேஸ்வரி - வரதராஜா
(பிள்ளைகள்)
ராஜலக்ஷ்மி
ராஜீவ்குமார்
ராஜேந்தினி

மதியழகன் - ஜெயந்தி
(பிள்ளைகள்)
லக்ஷ்னா
லக்ஷ்மன்
ஹரிஸ்

தனலக்ஷ்மி - சோதிராஜா
(பிள்ளைகள்)
பரணி
பார்த்திபன்
பிரகலாதன்
கஸ்தூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவக் குறிப்புக்கள்...

- வெங்காயத்தை நெய்யில் வதக்கி சாதத்தோடு பிசைந்து சாப்பிட்டு வர தூக்கம் தானாய் வரும்.
- குப்பைமேனி இலையை உப்புடன் அரைத்து சொறி, சிரங்கு இருக்கும் இடத்தில் பூசி குளித்தால் சொறி சிரங்கு போய்விடும்.
- நாய் கடித்தால் வெள்ளைப் பூண்டை அரைத்து கடிபட்ட இடத்தில் பற்றுப்போட வேண்டும். சிறுது வெள்ளைப் பூண்டை வாயில் போட்டு மெல்லுவதும் நல்லது.
- பேரீச்சம்பழம் இரத்த விருத்திக்கு சிறந்த பழமாகும்.
- அப்பிள் துண்டை தேனுடன் தேய்த்து சாப்பிட்டால் கண்களுக்கு சிறந்த தெளிவு ஏற்படும்.
- தீப்பிடித்த காயங்களுக்கு கனிந்த வாழைப்பழத்தை புண்மீது தடவி வெற்றிலையால் மூடி கட்டி வந்தால் சுட்டபுண் குணமாகும்.
- சுட்டபுண்ணுக்கு தேனுடன் வெள்ளைக்கருவை சேர்த்து பூசினால் மாறும்.
- மூக்கில் இரத்தம் வருபவர்கள் சிறிது எலுமிச்சம் பழச்சாறு விட்டால் உடன் நிற்கும்.
- புளியான உணவுகளை இரவில் உண்பதை தவிர்த்தல் நல்லது.
- தாய்ப்பால் அதிகமாக சுரக்க அதிக எள்ளை உணவில் சேர்த்தல் நல்லது.
- காதில் பூச்சி புகுந்தால் உப்பு தண்ணீரை விட்டால் வெளிவந்துவிடும்.
- சலம்போவது சிரமமாய் இருந்தால் எலுமிச்சம் பழச்சாறுடன் நல்லெண்ணையும் கலந்து சாப்பிட்டால் சுலபமாய் சலம் வெளியேறும.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எமது பெற்றோர் இறைவனடி சேர்ந்த வேளையில்,
நேரில்வந்து ஆறுதலளித்த உற்றார், உறவினர்,
நண்பர்களுக்கும்;
உள்ளூர், வெளியூர்களிலிருந்து தொலைபேசி, தொலைநகல்,
மின்னஞ்சல்மூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும்;
மலர்கொத்து, மலர் வளையம் அளித்தவர்களுக்கும்;
இரங்கல் செய்தி வெளியிட்டவர்களுக்கும், அஞ்சலி உரை
நிகழ்த்தியவர்களுக்கும்;
எங்கள் பெற்றோரின் இறுதிக் கிரியைகள், அந்தியேட்டிக்
கிரியைகளை முறைப்படி நடாத்தியுதவிய சிவஸ்ரீ சபேசக்
குருக்கள் அவர்களுக்கும்;
இம்மலர் சிறப்புற அமைய உதவிய 'கலாபூஷணம்' திரு வே.
சுந்தரலிங்கம், திரு க. மகாலிங்கசிவம் (நாழிகை ஆசிரியர்),
திரு இ. கந்தசாமி (ஈழநாடு ஆசிரியர்) ஆகியோருக்கும்,
மிகச் சொற்ப காலத்தில் இம் மலரை அச்சிட்டு உதவிய JR
Printers திரு பாலரவி அவர்களுக்கும்;
எமது பெற்றோர் முதுமையுற்றிருந்தவேளையில் இறுதிவரை
அவர்களைத் தனது தாய் தந்தையர் போன்ற பரிவுடன்
பராமரித்த திருமதி லதாவுக்கும்;
மற்றும் இந் நிகழ்வுகளில் பங்குகொண்ட அனைவருக்கும்
எங்கள் மனமார்ந்த நன்றிகளை அன்புடன்
தெரிவித்துக்கொள்கிறோம்.

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உழைப்பு = வெற்றி

துருப்பிடித்துத் தேய்வதை விட உழைத்துத் தேய்வதே நல்லது. நீ நினைத்தால், விண்மீனையும் விழுங்கிவிட முடியும். இதுவே உன் உண்மைப் பலம். மூட நம்பிக்கைகளை உதறித் தள்ளிவிட்டுத் தைரியமாகச் செயல்படு!

கடுமையான உழைப்பின்றி மகத்தான காரியங்களைச் சாதிக்க முடியாது. பயந்து பயந்து புழுவைப்போல் மடிவதை விட, கடமை எனும் களத்திலே போரிட்டு உயிர் துறப்பது மேலானது. எதுவும் செய்யாமல் இருப்பதைவிட எதாவது செய்வதே நல்லது, அதில் தவறு நேர்ந்தாலும் பாதகம் இல்லை.

எதிர்காலத்தில் என்ன நேருமோ என்று கணக்குப் பார்த்துக் கொண்டே இருப்பவனால் எதையும் சாதிக்க முடியாது. முயன்று செயல்களை செய்பவனே வாழ்க்கையில் வெற்றி பெறுவான்.

*- சுவாமி விவேகானந்தர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed & Printed @ JR Print, T : 0208 503 6643